Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 249

ஞாயிற்றுக்கிழமை
03 ஒகஸ்ட் 2025

ஆடி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

## திடீர் சுகவீனம்: இளைஞர் பலி

யாழ்ப்பாணம், ஒக. 3
யாழ்ப்பாணம் - நாவற்குழி தெற்கு கைதடி பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், திடீர் சுகவீனம் காரணமாக நேற்று உயிரிழந்துள்ளார். சுந்தரலிங்கம் தேனுஜன் (வயது-29) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவரா 15

# 70 பாடசாலைகளுக்கும் மேல் வடக்கில் மூடவேண்டிய நிலை

அமைச்சர் சந்திரசேகர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 3**

**வடமாகாணத்தில் 982 பாடசாலைகள் காணப்படும் நிலையில், அவற்றில் எழுபதுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.** 15



## டிப்பருக்குள் நசியுண்டு குடும்பத்தலைவர் பலி!

வவுனியா, ஒக. 3
டிப்பர் வாகனம் ஏறியதில், நபரொருவர் நசியுண்டு பரிதாபமாக உயிரிழந்தார். திலீபன் என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
வவுனியா நெடுங்கேணி துவரங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இந்தச் 15

## செம்மணிப் புதைகுழியில் மேலும் 4 என்புத்தொகுதிகள்

யாழ்ப்பாணம், ஒக. 3
யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று மேலும் நான்கு என்புத்தொகுதிகள் அவதானிக்கப்பட்டுள்ளன.
செம்மணி மனிதப் புதைகுழியில் இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 28ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. 15



## வல்வைப் படுகொலைகள் நினைவேந்தல் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 3
வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழ்த் தேசியப் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று மாலை 15

## கல்வியின் முக்கியத்துவம் தொடர்பில் தமிழர்களுக்குக் கூறவேண்டியதில்லை

பிரதமர் ஹரிணி அமரசூரிய புகாரம் சா/த பெறுபேறு தொடர்பில் வேதனை



யாழ்ப்பாணம், ஒக. 3
கல்வியின் முக்கியத்துவம் தொடர்பில் வடக்கு மக்களுக்கு நான் கூற வேண்டியதில்லை. ஆனால், சாதாரண தரப் பெறுபேறில் வடக்கில் ஏற்பட்டுள்ள பின்னடைவுவேதனையை 15

செம்மணியில் சி.ஐ.டி.யிடம்

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வாக்குமூலம்!

யாழ்ப்பாணம், ஒக. 3
காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.
செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் தற்போது கையாளப்பட்டு 15



யாழ். நகரில் குவிவதை விடுத்து

## எல்லைப் பாடசாலைகளில் பணியாற்ற முன்வாருங்கள்

வடமாகாண ஆசிரியர்களுக்கு பிரதமர் ஹரிணி அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக. 3
வடமாகாண ஆசிரியர்கள் பலரும் யாழ்ப்பாண நகரப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் பணியாற்றவே விரும்புகின்றனர். இது மிகவும் தவறான அணுகுமுறையாகும். எல்லைப் பகுதிகளில் உள்ள 15

மக்களின் பார்வைக்கு வைக்கப்படவுள்ள

## செம்மணி சான்றுப்பொருள்களை பார்வையிடும் முறை அறிவிப்பு!

யாழ்ப்பாணம், ஒக. 3
யாழ்ப்பாணம் - செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை மீட்கப்பட்ட சான்றுப்பொருள்கள் நாளை மறு தினம் செவ்வாய்க்கிழமை மக்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்படவுள்ள நிலையில், அவற்றை பார்வையிடும் ஒழுங்குவிதிகள் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவால் அறிவிக்கப் 15

சான்றுப்பொருள்களைப் பார்வையிடும்போது

## அறிவுறுத்தல்களை மீறினால் சட்ட நடவடிக்கைகள் பாயும்

யாழ்ப்பாணம், ஒக. 3
செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் நாளைமறுதினம் சான்றுப்பொருள்கள் காட்சிப்படுத்தப்படும்போது, 15



## வவுனியா பல்கலையில் நூலகம் திறந்துவைப்பு!

வவுனியா, ஒக. 3
வவுனியா பல்கலைக்கழகத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரியவால் நேற்று நூலகம் திறந்துவைக்கப்பட்டது. 15

### முச்சந்தி முரளி

'அதுகளை மூடுறதைப் பற்றிச் சாத்திரம் செல்லாமல் மூடாமல் இருக்கவெல்லோ உவையள் வழிசெய்யோணும்'

சஞ்சீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 02.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4151
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 41 43 62 69
விசேட எழுத்து K

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி 02.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1218
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 24 28 57 61

**NLB ஜய**
திகதி 02.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0177
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 4 5 5 4

**மெகா பவர்**
திகதி 02.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2257
ஆங்கில எழுத்து U
சுப்பர் இலக்கம் 06
வெற்றி இலக்கங்கள் 09 27 37 69

**மஹஜன சம்பத**
திகதி 02.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5909
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 3 4 2 9 8 7

**தன நிதானய**
திகதி 02.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1939
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 03 33 39 66
விசேட எழுத்து Z

**அத சம்பத**
திகதி 02.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0484
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 2 9 8 7

**சுப தவசக்**
திகதி 02.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0025
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 09 18 33 37

## முன்னாள் ஜனாதிபதிகளின்
# வரப்பிரசாதங்கள் 'கட்'
## சட்டமூலம் மீதான விவாதம் 7 இல்

**கொழும்பு, ஓக. 3**

**முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் வரப்பிரசாதங்களை இரத்துச்செய்வதற்கான சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள நிலையில் இந்தச் சட்டமூலம் மீதான விவாதம் எதிர்வரும் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெறும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான உத்தியோகபூர்வ வீடுகள் அல்லது மாதக்கொடுப்பனவுகள் இந்தச் சட்டமூலத்தின் பிரகாரம் இரத்துச்செய்யப்படவுள்ளன.

முன்னாள் ஜனாதிபதிகளின் பிரத்தியேக செயலாளர்களுக்கான கொடுப்பனவுகள், உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளும் இரத்தாகின்றன. அத்துடன், அவர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டவுடன் இரத்துச்செய்யப்படும் என வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே சட்டமூலம் மீதான விவாதம் எதிர்வரும் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெறும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சட்டமூலம் தொடர்பில் எவரும் ஆட்சேபனைகள் தெரிவிக்காவிடின் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இந்தச் சட்டமூலம் மீதான இரண்டாம் மற்றும் மூன்றாம் வாசிப்புகள் இடம்பெற்று நிறைவேற்றப்படும். எவரும் நீதிமன்றம் சென்றால் சட்டமூலத்தை நிறைவேற்ற மூன்று வாரங்கள் காலதாமதமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 02.08.2025 தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0617
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கம் 2 6 6 7 8 5

**Super Ball DLB**
திகதி 02.08.2025 தினம் சனிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2883
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கம் 05 06 18 77

**சனிதா DLB**
திகதி 02.08.2025 தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கம் 06 32 43 71
வெற்றி வாரம் 5044

**SASIRI DLB**
திகதி 02.08.2025 தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0739
வெற்றி இலக்கம் 20 29 30

**லக்ன ராசி DLB**
திகதி 02.08.2025 தினம் சனிக்கிழமை
கும்பம்
வெற்றி இலக்கம் 02 23 31 50
சீட்டிழுப்பு வாரம் 4595

**KAPRUKA DLB**
திகதி 02.08.2025 தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து N
சுப்பர் இலக்கம் 17
வெற்றி இலக்கம் 07 17 43 54
வெற்றி வாரம் 2059

**அத கோடிபதி DLB**
திகதி 02.08.2025 தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கம் 22 31 33 71
வெற்றி வாரம் 2709



## இலங்கைக்கு வருகைதந்த இங்கிலாந்து நாடாளுமன்றக்குழு

கொழும்பு, ஓக.3

இங்கிலாந்து நாடாளுமன்றத்தைச் சேர்ந்த நான்கு பேர் கொண்ட குழு அண்மையில் இலங்கைக்கு வருகை தந்து இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து இரு நாடுகளின் நாடாளுமன்றங்களுக்கு இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையிலான கருத்துகளைப் பகிர்ந்தது.

அத்துடன் ஜனாதிபதி செயலாளர் அலுவலகம், பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் பொதுநலவாயப் போர் நினைவிடங்களுக்கும் குழுவினர் பயணித்தனர். (ச-இ)

## ஊழலற்ற எம்.பி.க்கள் குழு உருவாக்கம்!

கொழும்பு, ஓக.3

எதிர்க்கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைக்கும் நோக்கில் ஊழல் குற்றச்சாட்டுகள் அற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கொண்டு குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி மற்றும் மொட்டுக்கட்சி உள்ளிட்ட முக்கியஸ்தர்களே இந்தக் குழுவை உருவாக்கியுள்ளனர்.

எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள எந்தவொரு தேர்தலையும் ஒன்றிணைந்து பலமான முறையில் எதிர்கொள்வதே இந்தக் கூட்டமைப்பின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-75)



## அரசியல் கூட்டிணைவு களமிறங்குகிறார் நாமல்



கொழும்பு, ஓக.3

விரிவான அரசியல் கூட்டமைப்பொன்றை உருவாக்கும் நோக்கில் மொட்டுக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச அந்தக் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள் 25 பேரைச்சந்தித்துப்பேச்சுநடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்பு பெலவத்தையில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

எதிர்காலத்தில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகக் காலத்துக்கு ஏற்ப எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது என்பது பற்றி இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஏனைய கட்சிகளையும் ஒன்றிணைத்து இதற்கான விரிவான அரசியல் சக்தி ஒன்றை உருவாக்குவது தொடர்பில் பல கட்சிகளுடன் பேச்சுகள் நடத்தப்படும் என்று மொட்டுக் கட்சி வட்டாரம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## ஊடகவியலாளர் நிலக்சனின் 18 ஆவது ஆண்டு நினைவு!


யாழ்ப்பாணம், ஓக.3

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 18 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்.கொக்குவிலில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் மூத்த எழுத்தாளர் மு.ஈழத்தமிழ்மணி தலைமையில் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

நிகழ்வில் சகாதேவன் நிலக்சனின் உருவப்படத்துக்கு முன்பாக நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. (ச-66,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய விசுவாவசு வருடாந்தப் பெருந்திருவிழாவின் நான்காம் நாள் மாலை உற்ச வம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பக்திபூர்வமாக நடைபெற்றது. இதன்போது நீலமயில் வாகனத்தில் நல்லூர்க் கந்த வேற்பெருமான் வள்ளி தெய்வானை நாயகியருடன் வீதி வலம் வந்தார். (ச-66)

# தெய்வீக அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக.3

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க் கந்த சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் "தெய்வீகக் கலை அர்ச்சனை" நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆறுகால் மடம் ஐயப்பன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும், சைவப்புலவர் கந்த. சத்தியதாசனின் "கதாப்பிரசங்கம்" நிகழ்வும் இடம்பெறவுள்ளன. இந்த தெய்வீகக் கலை அர்ச்சனை நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் தினமும் காலை 10மணிக்கு இடம்பெறுகின்றது என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ச-41)

# தெய்வீகக் கூட்டத் தொடர் ஆறாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.3

நல்லூர்ப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் ஆறாம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை, மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வேதாந்த மடம், ஸ்ரீ சிவகுருநாதபீட 8ஆவது குருபீடாதிபதி வணக்கத்திற்குரிய ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் முன்னிலை வகிக்க, சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியச் செயலாளர் சிவஸ்ரீ சோ.கேதீஸ்வரக் குருக்கள் தலைமையில், இத்திருக்கூட்ட நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதன்போது யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவின் கொழும்புத்துறை வதிரிபுட விநாயகர் அறநெறிப்பாடசாலை, நல்லூர் தெற்கு, கற்பக விநாயகர் அறநெறிப்பாடசாலை, கொழும்புத்துறை அம்பலவாணர் அறநெறிப்பாடசாலை, கொழும்புத்துறை சந்திரசேகரப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வும், வனஸ்ஜினி ஸ்ரீகரசர்மாவின் சிறப்புக் கலை நிகழ்வாக தனி நடன நிகழ்வும், நல்லூர், அநுராகம் கவின்கலை நிலையத்தின் குழு இசைநிகழ்வும், மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ச-41)

# 'கலாரசனா சங்கமம்கோடை' இரண்டாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.3

'கலாரசனா சங்கமம் கோடை' இரண்டாம் நாள் நிகழ்வு திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. ஜேர்மன் வாழ் புலம்பெயரி மா.யோகேஸ்வரனின் 'இசைச் சாகரம்' நிகழ்வில் ஞானவேல் வசந் மிருதங்கம், ப. சியாம் கிருஸ்ணா வயலின், வி.ராகவன் கெஞ்சிரா ஆகியவற்றை இசைக்கவுள்ளனர். தொடர்ந்து ர.மிதுனனின் 'பாரம்பரியம்' எனும் தொனிப்பொருளிலான நடனம் இடம்பெறும். (ச-25)



குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய விசுவாவசு வருட மஹோற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து பத்துத் தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக மஹோற்சவம் நடைபெறும். (ச-66)

# மலர் வெளியீடும் 'யாழ்.விருது' வழங்கலும்

யாழ்ப்பாணம், ஓக.3

நல்லூர்க் கந்தனின் பெருந்திருவிழாவினை முன்னிட்டு யாழ். மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழுவினால் வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 6ஆம் திகதி நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றியதோடல்லாமல் எமது சமூகத்துக்கு பலவிதத்தில் பணியாற்றிய பெருந்தகை ஒருவரை இனங்கண்டு கௌரவித்து வருடாவருடம் வழங்கப்படும் 'யாழ் விருது' இம்முறை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளரும் உயிரியல் ஆசானுமான சின்னத்தம்பி குணசீலனுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது என சைவசமய விவகாரக்குழு தெரிவித்துள்ளது. (ச-41)

(ஆறாம் திருவிழா)




## செம்மணிப் புதைகுழி பார்த்திடுவாய் முருகா!

செம்மணிப் புதைகுழி பார்த்திடு முருகா - நீ
சேற்றின் வாசம் மூக்கில் வீசுதே!
நெஞ்சம் பொங்கி நதிபோல் ஓடுதே

செம்மணிப் புதைகுழி பார்த்திடு முருகா நீ
சீராக எம்மவரை வாழவைப்பாய்
வாழவைப்பாய் சீராக வாழவைப்பாய்!

நிலத்தின் நெற்றியில் சூரியன் தீண்டுதே
விழிகளில் கண்ணீர் நிரம்பி வழியுதே!
புதையல்களாக எம் கதைகள் மாறுதே!

மூடல் திறந்து மழைவரும் நாளில்
உயிர்துடிக்கும் உயிரோடு சேர்ந்து
புதையல் போல எம் கதைகள் போனதே!

செம்மணிப் புதைகுழி பார்த்திடுவாய்
சீராக எம்மவரை வாழவைப்பாய்
வாழவைப்பாய் எம்மை வாழவைப்பாய்!

சிவன், மீசாலை

## கண்கண்ட தெய்வமே காப்பாய்

காவடிகள் பல கோடி உந்தனுக்கு உண்டு
கார்த்திகை பாலனே ஏறி வா மயிலே
கண்கண்ட தெய்வமே கடம்பனோ நீயும்
அப்பனுக்கு உபதேசம் செய்து குருவானாய்
அருணகிரி புகழ்பாட ஆட்கொண்ட தேவா
நல்லூரில் உறைந்து அருள்தந்திடும் முருகா
நல்லைநகர் வந்திட்டோம் எமக்கருளைத்
தாவேன்
அரோகரா கோஷத்தில் முழங்குதே வானம்
அடியவர் கண்ணீரைப் பொழிந்துமே கேட்க
பணக்காரக் கந்தன் என்ற பெயர் பெற்ற ஈசா
பக்தியுடன் பல பாடல் தந்திட்டோம் ஐயா
காண்டா மணியோசை ஓம் என்று ஒலிக்க
கண்கண்ட தெய்வமே என்றுமே காப்பாய்

நா.சண்முகரத்தினம்,
ஓய்வுநிலை அதிபர், புத்தூர்.

## நல்லை வீதியில் திருஉலா வருகிறார்

அழகொளிர் அலங்கார நல்லூரா என
அடியார்கள் வானதிர அழைத்திடவே
கோலமா மஞ்சைதனில் குலவிய குமரனாய்
காலகாலமாய் கண்கள் குளிர்ந்திட
வள்ளி தெய்வானை பங்கராய்
தெள்ளுதமிழ் திருவாசகம் திருப்புகழ்
அனுபூதி ஒலித்திடவே நல்லை
வீதியில் திருஉலா வருகின்றான்

ப.பாலசுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாதுகாப்புக் கெடுபிடிகளுடன் யாழ்.மோட்டார் திணைக்களம்

*மக்கள் விசனம்*

**யாழ்ப்பாணம், ஓக.3**

**யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் அலுவலகத்தின் வாயில் மூடப்பட்டு உள்ளே செல்லவேண்டுமாக இருந்தால் பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் காரணத்தைக்கூறி, அவர் அனுமதி வழங்கிய பின்னரே உள்ளே செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதுகாப்பு உத்தியோகத்தர் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் சேவைகள் பற்றிய முழுமையான அறிவு உடையவராக இருப்பதற்கு சந்தர்ப்பம் இல்லை. ஆகையால் மக்கள் கூறுகின்ற பிரச்சினைகள் விளங்காதுவிடின் உள்ளே செல்ல முடியாது என்ற நிலை காணப்படுகிறது.

சேவையைப் பெறுவதற்கு செல்கின்ற பொதுமக்கள் அனைவரும் தமது பிரச்சினைகளைப் பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் கூறித்தான் அனுமதி பெற்று உள்ளே செல்லவேண்டும் என்ற நடைமுறை எந்த அரச திணைக்களங்களிலும் இல்லை.

அத்துடன் சேவைகளைப் பெறுவதற்கு வருகின்ற பொதுமக்கள் ஆசனங்களில் அமர்வதற்கு அனுமதிக்காது அவர்களை வெளியே காக்கவைக்கின்ற நிலைமை காணப்படுகின்றது. சேவையைப் பெறுவதற்கு வருவோர் நேரத்தை வீணடிப்புக்கு உள்ளாகுவதுடன் சிரமங்களையும் எதிர்நோக்குகின்றனர் - என்றனர். (ச-27)




# சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து தமிழர் தாயகத்தில் 100 நாள் போராட்டம்

**கிளிநொச்சி, ஓக.3**

**வடக்கு - கிழக்கு மாகாணத்துக்குள் மீளப்பெறமுடியாத சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வைக்கோரி தொடர் 100 நாள்கள் போராட்டம் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவால் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.**

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மத்திய பேருந்துநிலையத்துக்கு முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. இதே வேளை கடந்த 2022ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி அடையாளப்படுத்தப்பட்ட 100 நாள் செயல் முனைவு என்ற அடிப்படையில் குறித்த போராட்டம்முன்னெடுக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாகவே நேற்றுமுன்தினம் மீண்டும்இந்தப்போராட்டம்தமிழர்தாயகத்தில்ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ச-25, 113)



# சிறப்பு மலர் வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக.3

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் 150ஆவது ஆண்டை முன்னிட்டு வெளியிடப்பட்ட சிறப்பு மலர், புலம்பெயர் நாட்டிலிருந்து பாடசாலைக்கு வருகைதந்த பழையமாணவர் ந.மகீதரன் என்பவருக்கு பாடசாலை அதிபர் கே.தவகீஸ்வரனால் வழங்கிவைக்கப்பட்டது. நிகழ்வில் பாடசாலையின் பழையமாணவர்கள்,பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-17)

# மட்டுவில் தெற்கு வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.3

மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலையின் வீதியை மழைகாலத்துக்கு முன்னர் புனரமைத்துத் தருமாறு பிரதேசமக்களால் சாவகச்சேரிப் பிரதேச சபையின் தவிசாளரிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

இந்த வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு கடந்த காலங்களில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர் அந்த நிதி வேறு பிரதேசத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. இந்த வீதி பாடசாலைக்குச் செல்வதற்கான ஒரேயொரு வீதியாகும்.

இந்த வீதியால் நாளாந்தம் பாடசாலை செல்லும் மாணவர்கள் உள்ளிட்ட பலர் பயணம் மேற்கொள்கின்றனர். மழைகாலம் ஆரம்பமாகவுள்ள நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படும் வீதியில் வெள்ளம் தேங்கிநின்றால் விபத்துகளுக்கு வழிவகுக்கும். ஆகவே மழைக் காலத்துக்கு முன்பு இந்த வீதியை ஒழுங்கானமுறையில் புனரமைப்புச் செய்து தரவேண்டும் என்றும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (ச- 159)



# கீரிமலை தீர்த்தக்கரையில் பக்தர்கள் அசௌகரியம்!

*மாவட்டச் செயலருக்கு றஜீவன் எம்.பி. கடிதம்*

யாழ்ப்பாணம், ஓக.3

கீரிமலைக் கடற்கரையில் மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும்வகையான நிலைமைகள் காணப்படுகின்றன. அவற்றைஉடனடியாகநிவர்த்திசெய்யவேண்டும் என்று கோரி யாழ்.மாவட்டச் செயலருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் கடிதம் அனுப்பியுள்ளார்.

ஆடி அமாவாசை தினத்தில் யாழ்ப்பாணம், வடமராட்சி, தீவகம், வேலணை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் தங்கள் ஆன்மீக நடவடிக்கைகளுக்காக கீரிமலைக் கடற்கரைக்குத் தரிசனம் செய்யவருகின்றனர்.

கடலுக்குள் உள்ள கூரிய கற்கள் மற்றும் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை காரணமாகப் பலர் காயங்களுக்கு உள்ளாகினர். இங்கு உடனடி மருத்துவ வசதிகள், எச்சரிக்கைப் பலகைகள், மீட்பு நடவடிக்கைகள் இல்லாமை காணப்படுகின்றது. எனவே இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் ஏற்படாமல் தடுக்கும் வகையில் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-66)

# மரக்கறிச் சந்தை இடமாற்றம்; பரு.நகரசபையில் தீர்மானம்


யாழ்ப்பாணம், ஓக.3

சர்ச்சைக்குரிய விவகாரமாக மாறிய பருத்தித்துறை மரக்கறிச் சந்தையை இடமாற்ற நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் பருத்தித்துறை நகரசபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஒரு மேலதிக வாக்கினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. பருத்தித்துறை நகரின் மத்தியில் காணப்படும் கட்டடத்தொகுதி கீழ்த்தளத்தில் பொதுச்சந்தை அமைப்பை பிரதானப்படுத்தி கொண்டுவரப்பட்டிருந்தது.

ஆனாலும் முன்னைய நகரசபை தரப்பினால் மேல் தளத்தில் மரக்கறிச் சந்தைக்கு இடம் ஒதுக்கியதுடன் கட்டாயத்தின் பேரில் மரக்கறி வியாபாரிகள் அங்கு வியாபார நடவடிக்கை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இருப்பினும் கீழ்த்தளத்தில் வியாபார நடவடிக்கையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு மரக்கறி வியாபாரிகளினால் தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்டு வந்தது.

புதிய சந்தை கட்டடத்தொகுதியானது பல்வேறு குறைபாடுகளுடன் அமைக்கப்பட்டிருப்பதாகவும் மரக்கறிச் சந்தைக்குப் பொருத்தமான இடமாக இல்லை எனவும் வியாபாரிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இந்தநிலையில் பருத்தித்துறை முதலாம் குறுக்குத்தெருவில் புதிய கட்டடம் கட்டப்பட்டு மரக்கறிச் சந்தையை இடமாற்ற நகரசபைச் செயலாளர் அண்மையில் நடவடிக்கை எடுத்திருந்தார். இந்தநிலையில் கடந்த புதன்கிழமை சபை அமர்வில் தற்போதைய புதிய மரக்கறிச் சந்தையை நகரின் மையப்பகுதியான நகரசபை சந்தைக் கட்டடத்தொகுதிக்கு மாற்றுவது எனவும், முதலில் கீழ்த்தளத்துக்குக் கொண்டுவருவது தொடர்பான சாத்திய ஆய்வினை பட்டயபொறியியலாளர் தலைமையில் நகர புத்திஜீவிகள் நலன் விரும்பிகளை இணைத்து ஒரு குழுவை அமைத்து மேற்கொள்வது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. குறித்த தீர்மானத் துக்கு ஆதரவாக ஏழு வாக்குகளும் எதிராக ஆறு வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. (ச-100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். அலுவலகத்தில் உங்கள் பணிகளை மற்றவர்களிடம் ஒப்படைக்காமல் நீங்களே செய்வது அவசியம்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். தேவையான பணம் கிடைக்கும். உறவினர்கள் சிலர் உங்கள் யோசனை கேட்டு வருவார்கள். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருப்பதுடன், ஆதாயம் தருவதாகவும் அமையும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் அவர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் சந்தர்ப்பம் கூடிவரும். கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு விவாதங்கள் ஏற்படும். பொறுமை அவசியம்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும், சக பணியாளர்கள் உதவிசெய்வார்கள்.

**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். உற்சாகமாகச் செயற்படுவீர்கள். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உங்களுடைய முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**துலாம்:** புதியமுயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். அரசாங்கக் காரியம் அனுகூலமாகமுடியும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறிக்குப் பிறகுதான் முடியும்.

**விருச்சிகம்:** காலையில் வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும்.

**தனுசு:** தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். சிலருக்குப் புதிய நண்பர்களின் அறிமுகம் ஏற்படும்.

**மகரம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஒருவர் தேவையை மற்றவர் நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாகும். வழக்கமான பணிகளில் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். தந்தைவழி உறவுகளால் அலைச்சலும் செலவும் ஏற்படும்.

**மீனம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாகச் செல்லவும். உறவினர்கள்வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

# அனுமதியின்றி குழாய்க்கிணறு அமைத்தால் சட்டநடவடிக்கை!

## வேலணைப் பிரதேசசபை அறிவுறுத்து

**யாழ்ப்பாணம், ஓக.3**

**வேலணைப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் முறையான அனுமதி பெறாது குழாய்க்கிணறுகள் அமைப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது எனவும் நடைமுறைகளை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வேலணைப் பிரதேசசபை அறிவித்துள்ளது**

இது குறித்து பிரதேசசபையின் தவிசாளர் அசோக்குமாரின் கையொப்பத்துடன் விடுக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில்,

வேலணைப் பிரதேசசபைக்குட்பட்ட இடங்களில் அண்மைக்காலமாக எந்தவிதமான அனுமதியும் பெறப்படாது அதிகளவான குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டுவருகின்றன.

அத்துடன் அமைக்கப்படும் குழாய்க்கிணறுகளை எந்தவிதமான கட்டுப்பாடுகள் மற்றும் போதிய வழிகாட்டுதல்களுமின்றி தான்தோன்றித்தனமாக அமைப்பது எமது பிரதேசத்தில் காணப்படுகின்ற நன்னீர்க் கிணறுகளை வெகுவிரைவில் பாதிப்படையச் செய்யும் ஒரு செயற்பாடாகும்.

அதனடிப்படையில் குழாய்க்கிணறுகளை அமைக்க உத்தேசித்துள்ளவர்கள் பிரதேசசபையின் ஊடாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு விண்ணப்பித்து பிரதேச சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வது கட்டாயமானதாகும்- என்றுள்ளது. (ச-27)

# கல்விக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 3

எதிர்காலத்தை வளமானதாக மாற்றிக்கொள்ளும் முகமாக பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து பல்கலைக்கழகம் செல்லாத மாணவர்கள், தொழில் செய்பவர்கள், உயர்தர மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கல்வியியற் கல்லூரி மாணவர்கள் ஆகியோருக்கான கல்விக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக்கல்லூரி அருணாச்சலம் மண்டபத்தில் காலை 10.30 மணிக்கு கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் லண்டன் சர்வதேச தொழில்நுட்பப் பிரிவில் தேர்ச்சிபெற்ற முனைவர் சபேசன் சிதம்பரநாதன் கருத்துரை வழங்கவுள்ளார். கருத்தரங்கில் மேலும் கல்விசார் அறிஞர்கள் கருத்துரை வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து இந்தக் கல்விக் கருத்தரங்கு எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் ச. மாறன் தலைமையில் நடைபெறவுள்ளது. கருத்தரங்கில் யாழ்ப்பாணப் பிரதேச மற்றும் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொள்ளலாம். கருத்தரங்குகள் முற்றிலும் இலவசம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-131)

# 'கலையால் மகிழ்வோம்' கலைவிழா இன்று

யாழ்ப்பாணம், ஓக.3

இளவாலை திருமறைக்கலாமன்றம் நடத்தும் 'கலையால் மகிழ்வோம்' கலைவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு இளவாலை திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலைக்களரி மண்டபத்தில் இளவாலை திருமறைக்கலாமன்ற இளையோரவை உறுப்பினரும், கட்டடப்பொறியியலாளருமான அ. அனோஜன் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்வி அலுவலகம் தமிழ்ப் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் சோ. கலாவண்ணன், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ப. தமிழ்மாறன், கௌரவ விருந்தினராக இளவாலை திருமறைக்கலாமன்ற மகளிரவை முன்னாள் உறுப்பினரும், ஆதரவாளருமான திருமதி மிலானி ஜெயந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-159)





# காடு துப்புரவு; இருவர் கைது

வவுனியா, ஓக.3

வவுனியா, நெடுங்கேணி, தண்டுவான் பகுதியில் சட்டவிரோதமாகக் காட்டுப் பகுதியைத் துப்புரவுசெய்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும், மாங்குளம் வனவளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை சட்ட நடவடிக்கைக்குட்படுத்த நெடுங்கேணிப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-[illegible])

# இளந்தளிர் முன்பள்ளியில் ஆக்கத்திறன் கண்காட்சி

வடமராட்சி உடுப்பிட்டி தெற்கு இளந்தளிர் முன்பள்ளி மழலைகளின் ஆக்கத்திறன் கண்காட்சி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுப்பிட்டி விநாயகா முன்பள்ளியின் பொறுப்பாசிரியர் விஜயசிறீமேனகா, சிறப்பு விருந்தினர்களாக உடுப்பிட்டி சைவப்பிரகாச மருத்துவமனையின் அதிபர் என். சுதாகர், வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் தவிசாளர் தி. நிரோஷ் ஆகியோர் கலந்துகொண்டனர். கண்காட்சியில் பனைமரம் கற்பகதரு, தன்னியக்க பணமெடுக்கும் இயந்திரம், மிருகக்காட்சிசாலை, நீர்வீழ்ச்சி, அழகான வீடுகள், மருத்துவமனை, மழலைகளின் சிறிய புத்தாக்கங்கள் எனப் பல வண்ணமயமான ஆக்கங்கள் அனைவரையும் கவர்ந்தன. (ச-25, 27-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## ஒரேகல்லில் இரு மாங்காய்கள்!

இலங்கைமீது விதிக்கப்பட்டிருந்த 30 வீத வரியை மூன்றில் ஒரு பங்கு குறைத்திருக்கின்றார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். இதன்படி, கடந்த முதலாம் திகதிமுதல் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பரஸ்பர வரிக்கொள்கை 20 வீதம் என்றவாறாக நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது. இலங்கைக்கு 20 வீத வரியை அமெரிக்கா விதிக்கப்போகின்றது என்பதற்கு அப்பால், இந்த வரிநிர்ணயத்தை இலங்கை அர சாங்கத்துக்குக் கிடைத்த தார்மீக வெற்றியாகவே சுட்டிக் காட்டியுள்ளனர் பொருளாதார நிபுணர்கள். உண்மையும் அதுதான்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இயல்பிலேயே ஒரு வர்த்தகர். உலகின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் 'வரிகளால்' தீர்வுண்டு என்பது அவரின் கொள்கை. அத்துடன், வர்த்தகம், வரி என்று வரும்போது பச்சாதாபம் என்பது அவருக்குக் கிடையாது. ஆதலால்தான் அவரை 'நூறு வீத வியாபாரி' என்று அடையாளப்படுத்துகின்றனர் உலகப் பொருளாதார வல்லுநர்கள். சிரியாவில் உள்நாட்டுப்போர் ஏற்படுவதற்கும் 'அந்தப் போர் பல தசாப்தங்களாக நீண்டு நிலைபெறுவதற்கும்' சிரியா சல்லடை சல்லடையாக நொறுங்கிப் போவதற்கும் காரணமே அமெரிக்காதான். இன்று சிரியா வாழ்வதற்கு வழியில்லாமல் நிற்கையில், சிரியாமீது 41 வீத வரியை விதித்துள்ள ட்ரம்பின் நடவடிக்கை, அவர் எவ்வளவு தூரம் இந்த விடயத்தில் இரக்கமற்றவர் என்பதைக் கட்டியம் செய்கின்றது.

இதைவிட, அயல்நாடான கனடாவுடன் உறவுறுப்பு, நீண்டகால நட்புறவு நாடான இந்தியாவுக்கு எதிரான கீழ்த்தர வசைபாடல்கள், ஐரோப்பிய வல்லரசுகளுக்கு எதிரான வரித் தாக்குதல்கள் ஆகியவற்றையும் ட்ரம்பின் இறுக்கமான வரிக்கொள்கைக்கு எடுத்துக் காட்டாகக் கூறிக்கொள்ளலாம். 'வேலை என்று வந்துவிட்டால் வெள்ளைக்காரன்' என்று கூறுவதைப்போல, 'வர்த்தகம் என்று வந்துவிட்டால் அங்கே ட்ரம்ப்தான் எல்லாம்'. அப்படிப்பட்ட ட்ரம்புடன் இராஜதந்திர பேச்சுகளை திரும்பத் திரும்ப நடத்தி மூன்றல்ல, ஐந்தல்ல, மூன்றில் ஒரு பகுதி வரிக்குறைப்பைப் பெற்றிருக்கின்றது ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்.


ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரிகள் எகிறியவுடன் அநுரவின் அரசாங்கம் ஆட்டம் காணும் என்ற எதிர்பார்ப்பில்தான் எதிர்க்கட்சிகள் இருந்தனவே அன்றி, 'தேசத்தின் சவாலை' எதிர்கொள்ளும் உணர்வொன்றிப்பை எந்தக் கட்சியிடமும் காணமுடியவில்லை. இப்படிப்பட்ட நிலையில்தான் அமெரிக்காவிடம் இருந்து அவ்வளவு இலகுவில் சாத்தியப்படாத சலுகையைப் பெற்று, எதிர்க்கட்சிகளின் கனவைக் கலைத்திருக்கிறார் அநுர. அமெரிக்காவிடம் இருந்து வரிச்சலுகையைப் பெற்றுக்கொண்ட நாடுகளில் முன்னணியில் உள்ளது இலங்கை. இதற்காக அரசாங்கத்தை எத்தனை பாராட்டினாலும் அது தகும்தான். இங்கே அவதானிக்கப்பட வேண்டிய மற்றொரு விடயம் என்னவென்றால், இலங்கைக்கு அமெரிக்கா சலுகைகளைத் தந்த அதேநேரம், ஆடையுற்பத்தியில் சகபோட்டியாளர்களான பங்களாதேஷ் மற்றும் இந்தியாவுக்கு வரிகளை அதிகரித்திருக்கின்றது. இது இலங்கைக்கான வியாபார வாய்ப்பையும் அகலத் திறந்திருக்கின்றது. ஆக, இலங்கைக்கு ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


நாளொரு நல்வார்த்தை

பணம் ஓர் அத்தியாவசியப்பொருள்,
ஆனால் மனித உழைப்பிற்கு முன்னால்
அது கீழ்த்தரம் உடையது.

– சாமெர்செட் மகம் –



ஐ.எம்.எப். கிடுக்குப்பிடி

## 2028ஆம் ஆண்டுவரை வற்வரி குறைக்கப்படாது



கொழும்பு , ஓக. 3

வற் வரி மற்றும் பொருள்களின் விலைக் குறைப்பை எதிர்வரும் மூன்று வருடங்களுக்கு மேற்கொள்ள முடியாது என வீடமைப்புப் பிரதியமைச்சர் டி.பி. சரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், சர்வதேச நாணயநிதியத்தின் கொள்கைகளுக்கு இணங்கிக் கொண்டுள்ளதால், அதைமீறி செய்யமுடியாது. ஐ.எம்.எப். அவ்வாறு குறைப்பதற்கு அனுமதியளிக்காது.

நாங்கள் அரசாங்கத்தை எடுப்பதற்கு முன்னர் சர்வதேசத்தில் இலங்கையை வங்குரோத்தான நாடாகவே கருதினோம்.

அவ்வாறு இருந்த நாட்டை நாம் செழிப்பானதாக மாற்றியுள்ளோம்.

அண்மையில் சுற்றுலா செல்வதற்கு உலகில் அழகான தீவாக இலங்கையை அறிவித்துள்ளனர்.

2028ஆம் ஆண்டு ஐ.எம்.எப். இல் இருந்து நாம் வெளியேறும் காலமாகும். ஆனால் 2027ஆம் ஆண்டு வெளியேறத் திட்டம் தீட்டியுள்ளோம்.

அப்போது வற்வரி மற்றும் பொருள்களின் விலையைக் குறைப்போம். - என்றார். (ச-இ)

## யானை தாக்கி ஒருவர் பலி

கொழும்பு , ஓக. 3

மட்டக்களப்பு, வெல்லாவெளிப் பகுதியில் யானைத் தாக்குதலுக்கு இலக்கான நபர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 4 பிள்ளைகளின் தந்தையெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவரின் சடலம் களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன், வெல்லாவெளிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## போதைப்பொருளுடன் வெளிநாட்டவர் கைது

50.410 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 37 வயதுடைய வெளிநாட்டவர் ஒருவர் பம்பலப்பிட்டிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் செல்லுபடியாகும் விசா இல்லாமல் நாட்டில் வசித்துவந்தமையும் தெரியவந்தது. சந்தேகநபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

## புலமைப்பரிசில் பரீட்சை; மேலதிக வகுப்புக்குத் தடை

கொழும்பு, ஓக. 3

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை இலக்காகக்கொண்டு நடத்தப்படும் அனைத்து மேலதிக வகுப்புகள், விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் எதிர்வரும் ஓகஸ்ட் 6ஆம் திகதி நள்ளிரவு முதல் தடைசெய்யப்படும் எனப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்தத் தடையை மீறும் ஆசிரியர்கள், பாடசாலைகள் அல்லது நிறுவனங்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஓகஸ்ட் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## கசிப்புக்கோட்டை முற்றுகை; இரு சந்தேகநபர்கள் கைது

முல்லைத்தீவு, ஓக. 3

விசுவமடு, மாணிக்கபுரம் பகுதியில் நீண்டகாலமாக இயங்கிவந்த கசிப்புக் காய்ச்சும் இடம் முற்றுகையி டப்பட்டு, இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 30 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவல்களுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் இருவரும் 51, 56 வயதுடையவர்கள். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-113)

நாளை

திங்கட்கிழமை- ஆடி 19

04.08.2025

சுபநேரம் : 12.04 - 01.34

ராகுகாலம் : 07.34 - 09.04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிரங்க அறிவித்தல்

O.M.P.
SRI LANKA

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி வழக்கு விவகாரத்தில் பொது மக்களின் உதவியை நாடுதல்

### வழக்கு இல: AR/804/23 முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் உள்ள மனித புதைகுழி குறித்த விசாரணை முல்லைத்தீவு கௌரவ நீதவான் முன்னிலையில் நடத்தப்பட்டு வருகின்றது. முதற்கட்ட தொல்பொருள் பகுப்பாய்வுகள் இந்த புதைகுழி 1994-1996 கால கட்டத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று கூறுகிறது.

காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களைக் கண்டுபிடிப்பதற்கான காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பரந்த முயற்சிகளின் ஒரு அங்கமாக, 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தல், நிருவகித்தல் மற்றும் கருமங்களை ஆற்றுதல்) சட்டத்தின் பிரிவு 12 (ஆ) இன் கீழ், OMP அதன் கடப்பாடுகளின்படி, மனிதப் புதைகுழி மீதான விசாரணையைக் கண்காணித்து வருகிறது.

புதைகுழியில் உள்ள மனித எச்சங்களின் அடையாளம் குறித்து தீர்மானம் மேற்கொள்வதற்குத் துணைபுரியுமாறு காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திடம் முல்லைத்தீவு நீதவான் கோரிக்கை விடுத்துள்ளார். இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள பொது மக்களிடம் இந்த வழக்கு தொடர்பான முக்கியமான தகவல்கள் இருக்கலாம் என்பதை காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நம்புகிறது. எனவே அது குறித்த உண்மையைத் தேடுவதில் உங்கள் ஆதரவு முக்கியமானது.

| Skeleton NO | Features helpful for Identification |
|---|---|
| 001 | No.3174 Undergarments<br>No.3104 Trouser |
| 002 | ஆ1564 -Underwear |
| 003 | I உ_018 Undergarments<br>No 1204 Trouser |
| 004 | X76 Undergarments<br>த.வி.பு.இ.1333-dog tag |
| 005 | 10546 Trouser |
| 006 | உ_10555 Underwear |
| 007 | No.1781 Underwear |
| 008 | No.302 Brassiere |
| 010 | த.வி.பு.இ.1302 |
| 014 | No.1124 Underwear<br>இ.1124 Trouser |
| 016 | இ.777 Underwear |
| 017 | 499 Underwear |
| 018 | த.வி.பு.இ.0043-dog tag<br>Blood group O positive |
| 019 | எ.306 Underwear |
| 020 | உ.10177 Underwear |
| 023 | X95 Underwear |
| 024 | இ.474 Trouser |
| 025 | இ.701 Underwear |
| 026 | இ.225 Underwear<br>த.வி.பு.இ.225 |
| 028 | இ.458 Underwear |
| 029 | ஈ.17 Underwear |
| 032 | இ.453 Shirt |
| 033 | எ.1778 Brassiere<br>760 Underwear |
| 034 | எ.599 metallic bracelet |
| 035 | உ.599 Brassiere |
| 036 | 1907 T-Shirt<br>7907 Brassiere |
| 040 | த.வி.பு.ஒ.3094 - dog tag |
| 042 | 3504 Underwear |
| 044 | 3503 Underwear<br>3471 Shirt |
| 045 | ஒ.3035 Trouser |

எனவே, கொக்குத்தொடுவாய் புதைகுழி குறித்து குறிப்பாக பின்வரும் தகவல்களை காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நாடுகின்றது.

- குடும்ப உறுப்பினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்களிகளிடமிருந்து புதைகுழியில் உள்ள எச்சங்கள் குறித்த சாத்தியமான அடையாளங்கள், அவற்றின் உடலியல் அம்சங்கள், உடைகள், முந்தைய காலங்கள் ஏற்பட்டிருந்த காயங்கள் போன்றவற்றை விவரிக்க முடியும்.
- புதைகுழியில் உள்ள எச்சங்களின் நெருங்கிய உறவினர்களைத் தொடர்பு கொள்ளும் தகவல்.
- நேரில் கண்ட சாட்சிகளிடமிருந்து இந்த உடல்கள் இந்த இடத்தில் எப்படி வந்தன என்பது குறித்த சம்பவங்கள் மற்றும் சூழ்நிலைகள் பற்றிய தகவல்.

இந்தத் தகவலின் அடிப்படையில், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பயிற்சி பெற்ற அதிகாரிகள், இந்த வழக்கு தொடர்பான முக்கியமான தகவல்களைக் கொண்ட சாத்தியமான உறவினர்கள், சாத்தியமான சாட்சிகள் மற்றும் வேறு எவரையும் நேர்காணல் செய்வார்கள். அலுவலக சட்டத்தின் கீழ், இரகசியத்தன்மையை உறுதி செய்வதற்கும் (பிரிவு 12 (இ) (V)) சாட்சி மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் (பிரிவு 13(1) (எ) மற்றும் 18) OMP கடமைப்பட்டுள்ளது. இந்த நேர்காணல்கள் மூலம் உணர்ச்சியைத் தூண்டக்கூடிய துயரத்திற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் OMP அறிந்திருக்கிறது. இதனால் உளவியல் ரீதியான சேவைகளும் வழங்கப்படும்.

இது தொடர்பான தகவல்கள் உங்களிடம் காணப்படுமாயின் எமது தலைமை அலுவலகத்திற்கோ அல்லது கீழ்க்காணும் எமது பிராந்திய அலுவலகங்களுக்கோ 05.08.2025 ஆந் திகதி முதல் 04.09.2025 ஆம் திகதி வரையில் வருகை தந்து தகவல்களை வழங்குமாறு அல்லது எம்மைத் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்**
**இல. 40, 3 ஆம் மாடி, புத்கமுவ வீதி, இராஜகிரிய**
**0112 861 431**

**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம், துணை அலுவலகம்,**
**மாவட்ட செயலகம், முல்லைத்தீவு**
**021 2286030**

**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்,**
**3 ஆம் மாடி, புதிய கட்டடம்,**
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்**
**021 2219400**

**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்,**
**இல. 54, தர்மாராம வீதி, கோட்டை, மாத்தறை**
**041 2244684**

**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்,**
**கோட்டை வீதி, பழைய மாவட்ட செயலக கட்டிடம், மட்டக்களப்பு**
**065 2222229**

**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்,**
**மாவட்ட செயலகம், மன்னார்**
**023 2223929**

**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம், A9 வீதி, நீதிமன்ற அருகாமை, கிளிநொச்சி**
**021 2286030**

# பழைய அரசியல்வாதிகள் இனி ஆட்சிக்கு வரக்கூடாது

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஒக.2

பழைய அரசியல்வாதிகள் எவரும் இனி ஆட்சி அதிகாரத்துக்கு வரக்கூடாது. இந்த அரசு முன்னெடுத்துச் செல்லும் ஊழல் ஒழிப்புத் திட்டம் மிகவும் திருப்திகரமாக உள்ளது என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் ; கடந்த அரசுகள் ஊழலை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. முந்தைய அரசியல்வாதிகள் எப்படிச் சொத்துகளைச் சேர்த்தார்கள் என்று மக்கள் யோசித்துப் பார்ப்பதில்லை. கொள்ளையடித்த சொத்துகளில் இருந்து மிகவும் சொற்ப தொகையை அவர்கள் மக்களுக்கு சேவை என்ற பெயரில் கொடுக்கிறார்கள். இதனால் மக்கள் அந்த அரசியல்வாதிகளைத் தெய்வமாக மதிக்கிறார்கள்.இதை வைத்தே அவர்கள் அரசியலில் உச்சத்துக்குச் செல்கின்றனர். ஆகவே,இது தொடர்பில் மக்கள் மிகவும் விழிப்புடன் செயற்பட வேண்டும்-என்றார். (ச-75)



**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா
**077 334 1281**

## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு



கடந்த 06.07.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவன்

அமரர்

### சின்னத்தம்பி பாலையா

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (03.08.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனிதத் தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (05.08.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவர்களின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கும்பலை, அளவெட்டி கிழக்கு, பூங்காலேன்.**
**குடும்பத்தினர். 077 138 7283**

(CS 59011)

## மணி விழாவும் சேவைநலன் பாராட்டு விழாவும்



### திரு. சண்முகசுந்தர சர்மா சிவசுதன் (SLTS - I) Sp.Trd. Maths

Best Wishes — Congratulation

**சேவை விபரம்:**

- முதல் நியமனம் : 1998.01.27
- யா/தொல்புரம் அ.மி.த.க - 1998.02.28 - 2000.08.31
- யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - 2000.09.01 - 2002.05.14
- யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி - 2002.05.15 - 2007.04.17
- யா/மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை - 2007.04.18 - 2010.04.18
- யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம் - 2010.04.19 - 2013.02.17
- யா/நாரந்தனை றோ.க.த.க.பாடசாலை - 2013.02.18 - 2016.03.31
- யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி - 2016.04.01 - 2025.08.02

அரசரும் பணிந்திடும் அரும்பெரும் பணியாய்
அடியெடுத்து வைத்து இருபத்தேழு ஆண்டுகள்
ஈடில்லா உன் சேவை ஈந்திட நல் ஆசானே.
பாடுகிறோம் உன் புகழைப் பாரெல்லாம் இன்புறவே

பள்ளி மாணவர் உள்ளம் கவர மெல்லக் கணிதத்தை
சொல்லிக் கொடுத்த வள்ளல் பெருந்தகையே
அமைதியாய் இருந்து அர்ப்பனமாய் அளப்பெரும் சேவையினை
ஆழ்மனதில் பதிந்திட்ட நல்லாசான் வாழியவே.

வாழ்த்துவோர்
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

(CS/59009) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தி வாசிக்கவும்

கனகரெத்தினம் சந்தானலெட்சுமி
(பூமணி)
(அன்னக்கிளி உரிமையாளரின்
மனைவி-கச்சேரி)
உதயன் பத்திரிக்கையில் நேற்று
(02.08.2025) 8ஆம் பக்கத்தில்
பிரசுரமான குறிப்பிட்ட மரண அறிவித்தலில்
தோற்றம் 03.02.1949 மறைவு
30.07.2025 என திருத்தி வாசிக்கவும்.
விளம்பரதாரர்
(CR 45696) A

## சிறந்த நிலம் விற்பனைக்கு

* மீசாலை கிழக்கு - வீட்டு நிலம்
* அல்லாரை தெற்கு - வீட்டுடன் தென்னங்காணி
* கச்சாய் (புங்கடி) - வயல், தென்னங்காணி

விலை பேசத்தக்கது.
தொடர்பு: 0776 544 540
(CR 45685) A

## வீடு வாடகைக்கு

87/7 Champian Lane கொக்குவில்
2 அறைகள், சமையலறை, குளியலறை
கொண்ட தனி வீடு தளபாடங்களுடன்
வீடு வாடகைக்கு விடப்படும்
தொடர்பு: 021 205 2323

## SPECIAL FARES

| | |
|---|---|
| LONDON | - 104500/- |
| NEW ZEALAND | - 150500/- |
| SWETZERLAND | - 151700/- |
| PARIS | - 98000/- |
| MALAYSIA | - 43500/- |
| DUBAI | - 27000/- |
| AUSTRALIA | - 104100/- |
| CANADA | - 160500/- |
| SPAIN | - 130000/- |
| SWEDEN | - 135000/- |
| GERMANY | - 145000/- |
| ITALY | - 57000/- |
| JAPAN | - 82200/- |
| CHINA | - 78000/- |
| USA | - 105000/- |

Condition Apply

KOKO VISA Accept

### VISA

| | | | |
|---|---|---|---|
| MALAYSIA | - 12500 | CHIINA | - 25000 |
| CAMBODIA | - 18500 | ETHIOPIA | - 24500 |
| INDIA | - 11000 | INDONESIA | - 35500 |
| EGYPT | - 18500 | USBEKISTAN | - 19500 |
| VIETNAM | - 18500 | KENYA | - 20500 |
| AZERBAJIAN | - 18500 | | |

* STUDENT SPECIAL FARE 20% *
* SPECIAL RATES FOR GROUP BOOKING 20% *
We Arrange Europe Documentation
I FOUR TRAVELS & TOURS
#378, George De Silva Mawatha, Colombo -13.
0765858770 I 0777262672

## முகாமையாளர் தேவை

நல்லூரில் இயங்கிவரும் Cafe
ஒன்றிற்கு முகாமையாளர் தேவை.

Qualification :

- Basic Knowledge about Coffee
- Good receiving, InventoryControl
- Hospitality 2 Year Experience
- Language (Tamil, English)

072 217 7535

## அச்சுவேலியில் குருதிக்கொடை

வலிகாமம் கிழக்கு - கோப்பாய்ப் பிரதேச செயலகம் மற்றும் யாழ். போதனா மருத்துவமனையின் இரத்த வங்கியின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் அச்சுவேலி மத்திய கல்லூரி வளாகத்தில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது. அவசரசிகிச்சை தேவைகளுக்காக இரத்தச் சேமிப்பை உயர்த்தும் நோக்கில் இந்த முகாம் நடத்தப்பட்டது. யாழ். போதனா மருத்துவமனை இரத்த வங்கியின் மருத்துவக் குழுவினரும், கோப்பாய்ப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டுக் குழுவினரும் இந்த முகாமை ஒருங்கிணைத்தனர்.

(ச-25)

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### மங்கையர்க்கரசி ராஜாராம்

(முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் - விஞ்ஞானம், முன்னாள் விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம் - மகரகம, தொண்டமானாறு வெளிக்கள நிலைய உப தலைவர், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் முன்னாள் செயற்குழு உறுப்பினர், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட சபையின் முன்னாள் உறுப்பினர், முன்னாள் தலைவர் - வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் )

மலர்வு
21.01.1943

உதிர்வு
05.08.2014

திதி:- தசமி (03.08.2025)

அன்பு. நேர்மை. இறைபக்தி. கடமையுணர்வு எமது குடும்ப முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட எனது அன்புத் துணைவியின் பத்து ஆண்டு நினைவு தினமாகிய இன்று (15.08.2024) வியாழக்கிழமை ஆடிவளர்பிறை தசமி திதியில் நினைவு கூர்ந்து எல்லாம் வல்ல கௌரி அம்பாள் சமேத திருக்கேதீஸ்வர பெருமானதும் சாவகச்சேரி கற்குழி அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரர் பெருமானதும் பாதாரவிந்தங்களை அடைய மனதாரப் பிரார்த்திக்கும்....

இ.ராஜாராம்
(பாசமிகு கணவர் - சமாதான நீதவான்)
அன்புத் தம்பிமார், அன்புத் தங்கை,
மைத்துனி, மைத்துனர் மற்றும்
மருமக்கள்.

இல.06, கற்குழி,
முதலாம் ஒழுங்கை,
தபாலக வீதி ஊடாக சாவகச்சேரி.
021 227 1493, 077 723 8528

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆருயிர் நண்பன்

அமரர்
## இராமதிலகம் உமேஷ்திரன்

(மானிப்பாய் இந்துக் கல்லூரி 1994 O/L, 1997 AL)

நட்பின் நினைவுச் சுவைகளையும் அன்பின் அழியாச் சுவடுகளையும்
பிரிவின் திராத துயரக் கொடுமையையும் தந்து விட்டுச் சென்ற
கெழுதகை நண்பா உனக்கு எங்கள் விழிநீர்க் காணிக்கை
பேராலமரமொன்றின் விழுதின் வேர் பட்டது போல் இன்று மானி
இந்து அன்னையின் தங்கமகன் எங்கள்
கண் பொங்கி அழ வைத்து விண்தங்கச் சென்றான்
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி
கன்னின் மனி போலக் கண்களுக்குள் உறவாடிய கண்ணியன்
கண்களுக்குள் நீ வைத்து விட்டு விண்புகுந்தான் கண் நிறைந்த
நண்பனுக்குக் கண்ணீர்க் காணிக்கை

பிரிவால் துயருறும்
நண்பர்கள்

தோற்றம்
16.09.1978

மறைவு
26.07.2025

(CS/3741) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில், திருமண வைபவங்கள், பிறந்தநாள் கொண்டாடம் மற்றும் பூ மணவறைகள், பலூண் டெக்கரேசன் செய்யக்கூடியவர்கள் தேவை.
பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
சம்பளம் - 45,000 + ot + EPF

தொடர்புக்கு - 077 775 0318

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**நாகரத்தினம் புஷ்பராணி**

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !
பிரிவால் துயருறும்

தோற்றம் 26.11.1945 மறைவு 01.08.2025


அயலவர்கள்
நாவலர் லேன், ஆனைப்பந்தி.

## வீடு வாடகைக்குண்டு

535, மாணிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தில் Lotous Hotel Bus Hold இற்கு அருகாமையில் இரு கடைகளிற்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய கீழ், மேல் வீடு வாடகைக்கு உண்டு.
உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. கார் தரிப்பிட வசதி உண்டு.

தொடர்புகளுக்கு: 077 079 9309

## மரண அறிவித்தல்



**அமரர் விநாசித்தம்பி மயில்வாகனம் (சிறி)**
**(ஓய்வு நிலை நில அளவைதிணைக்கள உத்தியோகத்தர்)**

செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும், உபயகதிர்காமம், புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி மயில்வாகனம் அவர்கள் நேற்று (02.08.2025) சனிக்கிழமை எல்லாம்வல்லவனின் பாதக் கமலங்களை சரணடைந்தார்.

அன்னார் தவமலர் அவர்களின் அன்புக் கணவரும், விநாசித்தம்பி-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், பூபாலசிங்கம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், மலர்மதி, மதிவருணன் (லண்டன்), மலர்விழி, மதனராசா (மதன் ரவல்ஸ்) ஆகியோரின் அன்பு தந்தையும், செல்வகுலசிங்கம், சந்தியா, கோபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், நடராசா (ஓய்வுநிலை கிராம அலுவலகர்), கனகரத்தினம், சோமசுந்தரம் (ஓய்வு நிலை பயிற்றுநர்-இலங்கை போக்குவரத்து சபை), பவளநாதன் (முன்னைநாள் களஞ்சிய காப்பாளர் வடமராட்சி கிழக்கு, ப.நோ.கூ.ச), சிவசுப்பிரமணியம் (முன்னைநாள் முகாமையாளர், வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.ச), விக்கினேஸ்வரன் (ஓய்வு நிலை வருமானவரி பரிசோதகர்), காலஞ்சென்ற அன்பரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவபுவனேஸ்வரி, தவபுனிதமலர், தவகுகானந்தம் (குணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மகிந்தன் (LB FINANCE, நெல்லியடி), மதுஷா, நிதுஷா, மகிஷா, மகிசன், பாவலன், கபிலன், அபிஷா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2025) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் புலோலி தெற்கு, உபயகதிர்காமம், கந்தமுருகேசனார் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**கந்தமுருகேசனார் வீதி,**
**உபயகதிர்காமம்,**
**புலோலி தெற்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 348 370[illegible]**

## குடியிருப்புக் காணி விற்பனைக்கு

கிளிநொச்சி, கனகபுரம் 5 ஆம் பண்ணையில் அமைந்துள்ள உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு.

- 1/2 ஏக்கர் காணி.
- இரண்டு துண்டுகளாக பிரித்துக் கொடுக்கப்படும்.
- கிணறு, மலசலகூடம், மின்சார இணைப்பு உள்ளன.

தொ.பே:070 22 000 02

(CS 3753) A

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம் 29/2, நெல்லியான் வீதி, வட்டாரம் - 5

வலிகாமம் மேற்குபிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 05 நெல்லியான் வீதியிலுள்ள இல: 29/2 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **பெரியான் சுப்பன்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்திற்கு **இராசையா கிருபாகரன் பெண் இந்திராணி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5766/26.05.1998 ஆம் இலக்க உறுதியால் **சுப்பன் திருவம்பலமும் பெண் சின்னம்மாவும்** ஆகியவர்களிடமிருந்து அவர்களின் சீவியஉரித்துக்கமைவாக நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**சின்னமணி நற்குணமும் பெண் இரத்தினாம்பிகையும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6784/09.01.2005ஆம் இலக்க உறுதியால் குறித்த **இராசையா கிருபாகரனும் பெண் இந்திராணியும், சுப்பன் திருவம்பலமும் பெண் சின்னம்மாவும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**நற்குணம் இரத்தினாம்பிகை** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது நற்குணம் இரத்தினாம்பிகை ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர்/ செயலாளர்
வலிகாமம் மேற்கு பிரதேசசபை

## மரண அறிவித்தல்

தோற்றம் 17.01.1964



மறைவு 02.08.2025

**திரு. யோசேப்பு சேவியர் செல்வநாயகம்**
**(முன்னாள் வடமாகாண கௌரவ ஆளுநரின் உதவிச் செயலாளர் முன்னாள் பிரதித்திட்டப்பணிப்பாளர் - திட்டமிடல் செயலகம், வடக்கு மாகாணம்)**

நெடுந்தீவு கிழக்கு 14ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 42, கோவில் வீதி ஒழுங்கை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.யோசேப்பு சேவியர் செல்வநாயகம் அவர்கள் நேற்று (02.08.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற யோசேப்பு (நெடுந்தீவு ப.நோ.கூ. சங்க களஞ்சிய முகாமையாளர்) மற்றும் மலக்கீசம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற லீனஸ்ரட்ணம் மற்றும் மேரி பியாற்றிஸ் தம்பதியரின் மருமகனும் மிறோன் லியோனிற்றா (சமுர்த்தி முகாமையாளர் மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும், தவநாயகம் (ஓய்வு நிலை அதிபர்), புனிதகலா (இலண்டன்), புஸ்பகலா (பிரதேச செயலகம், நெடுந்தீவு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் புதவுடல் யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (04.08.2025) திங்க்கிழமை நெடுந்தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு நாளைமறுதினம் (05.08.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் நெடுந்தீவு புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**42, கோவில் வீதி ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மஹிந்தவைச் சீண்டினால் அரசுக்கு அதோகதியே!

கொழும்பு, ஓக 3

மஹிந்த ராஜபக்சமீது கைவைக்க முற்பட்டால் தேசிய மக்கள் சக்திக்கும் அதோகதிதான் ஏற்படும் என்று மஹிந்த ராஜபக்சவின் பேச்சாளரான சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு தலைவர்கள் இலங்கை வந்தால், மஹிந்த ராஜபக்சவை சந்தித்து விட்டே செல்கின்றனர். எனவே, மஹிந்தவை கொழும்பில் இருந்து வெளியேற்றி, அவரது ஊரில் முடக்குவதற்குரிய சூழ்ச்சி இடம்பெறுகின்றது. சூழ்ச்சிகள் செய்பவர்களுக்கு குப்பைத் தொட்டியிலேயே இடம் கிடைக்கும். நல்லாட்சிக் காலத்தில் மைத்திரிபால சிறிசேன மஹிந்தமீது கைவைக்கப்போய்த்தான் தவறிழைத்துக்கொண்டார். எனவே, அரசியல் பழிவாங்கும் நோக்கில் மஹிந்தமீது கைவைத்தால் இந்த அரசுக்கும் அதே நிலைதான் ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யானை—மனித மோதல் விசேட கலந்துரையாடல்!

கிளிநொச்சி மாவட்டத்தில் யானை - மனித மோதலைத் தடுப்பதற்கான முகாமைத்துவக் குழுவினை அமைத்தல் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட பதில் செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில், மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இதன்போது யானை - மனித மோதலை தவிர்ப்பதற்கான உபாயமுறைகள், யானைமனித மோதல்கள் உள்ள பகுதிகளில் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளின் பங்குபற்றலுடன் பிரதேச செயலர் தலைமையில் விசேட கலந்துரையாடல்களை நடத்தி தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், புதிய யானைவேலிகளை அமைத்தல், விழிப்புணர்வு நடடிக்கைகள், கண்காணிப்பு நடவடிக்கைகள்போன்ற பலவிடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. (ச-25,113)


## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி மக்கள் வங்கிக்கு அருகில் 1 1/2 பரப்பு 2 பரப்பு, 1 பரப்பு காணிகள் விற்பனைக்குண்டு.
பலாலி வீதி 50 மீற்றர் தூரம்,
திருநெல்வேலி சந்தி 200 மீற்றர்.

தொடர்பு: 077 253 2575

## ஈரல் தேவை

48 வயதுடைய 0+ இரத்தவகையை சேர்ந்த ஈரல் செயலிழந்த ஒருவருக்கு 18 - 45 வயதுடைய ஈரல் தேவை. உடனடியாக ஈரல் வழங்க விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.

077 749 7902, 077 015 7902

## தேவை

மில் மேற்பார்வையாளர், கூலி ஆட்கள், சாரதி, மில் வேலை தெரிந்தவர்கள்.
மில் உபகரணங்கள்.

077 772 2215

## தேவை

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அரைக்கும் ஆலைக்கு பில்கிளாக், பொதியிடல், என்பவற்றிற்கு பயிலுனர், அனுபவம் உள்ள ஆண், பெண் ஊழியர்கள் தேவை.

076 297 7078

## தேவை

சாவகச்சேரி குளிர்பான விநியோகஸ்தர்க்கு விநியோக விற்பனை பிரதிநிதி தேவை.
(அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

077 391 5630

## வேலை வாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் மற்றும் சமுத்திரா ரேடர்ஸ்(Hard ware) நிறுவங்களுக்கான வேலை வாய்ப்பு. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
(யாழ் நகரில் உள்ளவர்கள் மட்டும்)

தொடர்புகளுக்கு:
076 151 7481, 077 494 9683

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இலுப்பையடி சந்தியின் பாதைக்கு அருகாமையில் 2 பரப்பிற்கு சற்று குறைவான காணி விற்பனைக்குண்டு.
முன்னறிவித்தலுடன் காணியை பார்வையிடலாம்.
அதிகூடிய விலைக்கு விற்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 359 7510, 077 298 7583

## வேலை வாய்ப்பு

யாழில் இயங்கும் சுப்பர் மார்க்கட்டுக்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.

1. Administration
2. Computet Billing + Cashier
3. Sales Assistant
4. Driver - (AD Licence)
5. Packing (பொதியிடல்)
6. Part Time - 5.00pm to 10.00pm
7. வயது எல்லை 18 - 35

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு :- 077 419 5209
077 419 5218


## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 27.03.1946 இறப்பு 02.08.2025

எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி தீ.வக்சலா அவர்களின் அன்பு மாமியார்

### நாகேஸ்வரி சிவலிங்கம்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
ஊழியர் நலன்புரிச் சங்கம்
யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயம்
தென்னைப் பயிர்ச்செய்கை சபை
பளை - கிளிநொச்சி

## மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 05 . 1937



இறப்பு 01 . 08 . 2025

### அந்தோனிமுத்து செபஸ்ரியாம்பிள்ளை

நவாலி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிமுத்து செபஸ்ரியாம்பிள்ளை அவர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (01.08.2025) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செபஸ்ரியாம்பிள்ளை இராக்கினியின் அன்புக்கணவரும், பியற்றீஸ் பிரியதர்சினி (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியை), பியற்றீஸ் பிறேமளா (சுவிஸ்லாந்து), அன்ரன் லியோன் (பிரான்ஸ்), யூட் பிரதீபன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், றொபேட் ஆனந்தராஜ், யேசுதாசன், தேவமாலா, ஜான்ஸி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆன் ஜெஸ்மியா, தர்ஷன், ஜெஸ்மன், ஜொகான்சன், கஸ்ரன், செருபா, எறிக் அபிக்கெயில் ஆகியோரின் அன்புப் பேரனும் ரிபனிக்காவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று 08.30 மணியளவில் புனித பேதுரு பாவுலு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்:
குடும்பத்தினர்.
077 019 3687

(CS 59014) E

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 08 . 1940



மறைவு 31 . 07 . 2025

### கிருஸ்ணபிள்ளை ஈஸ்வரபாதம் (ஆசாரி)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை ஈஸ்வரபாதம் அவர்கள் கடந்த (31.07.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற அரியமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் வயிரவநாதன், அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரனும், சுதாகரன், சுரேஸ்கரன், சியாமினி, றஜிதா, தனுஷா, துஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சண்முகராசா (அப்பன் - பிரான்ஸ்) மற்றும் பகீரதன், ரமேஸ், லிங்கேஸ்வரி, கலைப்பிரியா, பிரகலாதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இரத்தினதுரை மற்றும் மனோன்மணி, காலஞ்சென்ற அரசம்மா ஆகியோரின் மைத்துனரும், கஜானன், அபிநயா, சாரங்கன், சந்தோஷ், சந்தியா, பவிஷா, லருஜன், கபினாஸ், கஜலக்ஸ்மி, பமீரா, தக்சிகன், நதிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி வடக்கு சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
[illegible] வீதி.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/59010) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

National PVC KRYPTON

National PVC மற்றும் Krypton மின் உற்பத்தியாளர்

Central Finance Group

**Central Industries PLC**

இலங்கை தேசிய வர்த்தக சபை ஏற்பாடு செய்த
2025 தேசிய வணிக சிறப்பு விருதுகளில்

## கட்டுமானத் துறையில் தங்க விருது

நாங்கள் வெற்றி பெற்றோம் என்பதை அறிவிப்பதில் பெருமை கொள்கிறோம்.













இந்த அங்கீகாரங்கள், தரம், புதுமை மற்றும் குழு பணியின் மீதான எங்கள் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றன.

இதைச் சாத்தியமாக்கிய எங்கள் குழுவிற்கும், எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களான உங்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்!

## 50 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



எமது கலைவாணி கல்வி நிறுவன இயக்குனர்

**சிவராசா சிவரூபன்**

அவர்களின் பிறந்ததினமான இன்று (03.08.2025) ஞாயிற்றுக்கிழமை அவரை வாழ்த்துவதோடு அவரும் அவரது குடும்பமும் ஆரோக்கியமாகவும், சிறப்பாகவும் வாழ இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அகவை ஐம்பதை அணைத்திட்ட சிவரூப
கனவை அடைந்திட வகுத்த வழி, கலைவாணி
பாதை புதிது அமைத்து நீ நடத்திய வேள்வி
தனியார் கல்வி நிறுவனத்திற்கெல்லாம் விடிவெள்ளி!
கால் நூற்றாண்டு கடந்த கலைவாணி
நல்லை வேல் தேர் நிகர் ஒக்க ஒளிவீசக்
காரணம் ஒரணி நின்று வடம் பற்றும்
நின் தலைமைத்துவமும் தளராத கன நடையும் ஆகும்

வாழ்த்துவோர்: கலைவாணி கல்வி நிறுவன சமூகம்
மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்

(CS 59007) E

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| ➢ Stock Maintainance & Accounting | : 0779098450 |
| ➢ வீட்டுப்பணிப்பெண்(வவுனியா) | : 0788838395 |
| ➢ Sales Representative | : 0779994847 |
| ➢ House Keeper | : 0706053194 |
| ➢ Accountant | : 0756420131 |
| ➢ Business Manager | : 0753130101 |
| ➢ Debit Collector | : 0742014818 |
| ➢ தொழிலநுட்ப உத்தியோகத்தர்(Civil/QS) | : 0777120945 |
| ➢ Cashier (காசாளர்) | : 0776953242 |
| ➢ Restaurant House Keeper | : 0775527937 |
| ➢ Regional Agency Manager | : 0772019313 |
| ➢ Team Leader | : 0776013738 |
| ➢ பெண் உதவியாளர்கள் | : 0766397826 |
| ➢ Sales Manager(Basic 90,000) | : 0779969661 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்ல் இணைய மற்றும் மேலதிக
வேலைவாய்ப்புகளுக்கு: **dewmasweb.com**
வேலையாட்கள் தேவையா : **0741383368**
**DEWMAS**, 51, Amman Road, Nallur



## நல்லூர்க் கந்தனில் ஆன்மீக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக. 3
நல்லூர் ஆலய மஹோற்சவ காலத்தில் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்டு வரும் ஆன்மீக அருளுரை இன்று ஞாயிற்றுக்கிழமை ஐந்தாவது நாளாக நடைபெறவுள்ளது. இன்று இரவு 08 மணி முதல் இரவு 08.30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு "சும்மா இரு" எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரை ஆற்றுவார்.

(ச-66)

## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில்
10 வருடங்களாக புகழ்பெற்ற

### அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- மனதில் நிம்மதி இல்லையா?
- வாழ்வில் நிம்மதி இல்லையா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/16, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)

தொடர்புகளுக்கு :- **077 281 1234**

## பணியாளர் தேவை

யாழ்ப்பாண நகரில் இயங்கிவரும் சீலிங் காட்சியறைக்கு விற்பனைப் பணியாளர் ஒருவர் தேவை. சம்பளத்துடன் விற்பனைத் தரகுப் பணமும் வழங்கப்படும். சீலிங் அமைப்பதில் அல்லது பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்வதில் அனுபவம் இருந்தால் மேலதிக தகைமையாக கருதப்படும்.

தொடர்பு: **077 613 8133**

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.

பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply
Www.inaipa.com

(CS/56378) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையர் தினம் கொண்டாடி வலிகளை மறக்கடிக்கமுடியாது!

## பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக. 3

தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே காலத்துக்குக் காலம் தமிழர்களுக்கெதிரான கலவரங்கள் நிகழ்த்தப்பட்டன. முள்ளிவாய்க்கால் வரை இதுவே நீண்டது. இப்போது ஆடிக்கலவர நாளில் சகோதர தினத்தை முன்னெடுத்துள்ள ஜே.வி.பி. அரசாங்கம் விரைவில் இலங்கையர் தினத்தைக் கொண்டாடவுள்ளது. இதனால் தமிழ் மக்களின் வலிகளை மறக்கடித்து அவர்களின் மனங்களை வெல்லமுடியாது. இவ்வாறு இன்று, நாளை எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற கறுப்பு ஜூலை நினைவுக் கருத்தரங்கில் உரையாற்றுகையில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நினைவேந்தல்கள் வரலாற்றை நினைவுபடுத்துகின்றன. வரலாறு ஒருவரை எங்கு கொண்டுவந்து நிறுத்தியிருக்கின்றதோ அங்கிருந்துதான் அவர் தனது அடுத்த பயணத்தைத் தொடரமுடியும். நதிகளைப் போன்றே வரலாறும் பின்நோக்கிப் பாய்வதில்லை. இதுவே வரலாற்றின் நியதி. வரலாறு தமிழ்மக்களை முள்ளிவாய்க்காலில் கொண்டுவந்து நிறுத்தியது. ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட அந்த இடத்தில் இருந்துதான் அஞ்சலோட்டம் போன்று அடுத்த போராட்டத்தைத் தமிழ்மக்கள் ஜனநாயக வழியில் முன்னெடுத்திருக்க வேண்டும். உயிருள்ள சாட்சியங்களை விட வலுவான சாட்சியங்களாக இன்று எம்முன்னே செம்மணி மனிதப் புதைகுழிகளும், அவற்றிலிருந்து வெளிப்படும் எமது உறவுகளின் எலும்புக்கூடுகளும் உள்ளன. எலும்புக்கூடுகள் தனது கழுத்தை இறுக்கப்போகின்றன என்று அஞ்சும் பேரினவாதம் இதனைத் திசை திருப்புவதற்கான சகல எத்தனங்களிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. செம்மணிப் புதைகுழிகள் தந்துள்ள அரிய வாய்ப்பை எமது தலைவர்கள் சரியாகப் பயன்படுத்தி நீதிக்கான, விடுதலைக்கான எமது பயணத்தை வேகமாகத் தொடர முன்வரவேண்டும் - என்றார்.

(ச-66)

இலவச வகுப்புக்கள்
Guitar & Organ
வகுப்புக்கள் கற்பிக்கப்படும்
குழுவாயின் நேரிலும்
வந்து கற்பிக்கப்படும்.
இடம் - யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 077 942 4844

கொக்குவில் கிழக்கு நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

கீழ்வரும் ஆளணிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**குருக்கள் - 01**

ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகள், அபிஷேகங்கள் மற்றும் உற்சவங்களை மேற்கொள்ளும் தகைமையுடையவராக இருத்தல் வேண்டும்.

**உதவிப் பூசகர் - 01**

ஆலய பிரதம குருக்களுக்கு உதவியாக இருந்து கருமங்களை ஆற்றக் கூடிய தகைமையுடையராக இருத்தல் வேண்டும்.

**முகாமையாளர் - 01**

ஆலயத்தில் நிதி மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடியவராகவும், ஆசார சீலராகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு - குருக்கள் மற்றும் உதவிப் பூசகருக்கு தனித் தனியான தங்குமிடம் (வீடு) வழங்கப்படும் அதில் தங்கியிருந்து கடமையாற்ற வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு
070 222 2025

செயலாளர்
ஆலய பரிபாலனசபை

# தென்னை முக்கோண வலயம் மன்னாரில் கலந்துரையாடல்!

மன்னார், ஒக. 3

வடக்கு தென்னை முக்கோண வலய அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடல் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தலைமையில் மன்னார் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்ட தெங்கு உற்பத்தியாளர்களுக்கான உரமானியம், உதவித்தொகை, பயனாளிகளுக்கான புதிய தென்னங்கன்றுகள் என்பன வழங்கிவைக்கப்பட்டதுடன் பனை அபிவிருத்தி சம்பந்தமான நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

கூட்டத்தில் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் செல்லத்தம்பி திலகநாதன் , மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், மேலதிக செயலர்கள் ,பிரதேச செயலாளர்கள்,உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள்,உப தவிசாளர்கள், அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ச-25, 56-60)

வாடகைக்கு உண்டு

மானிப்பாய் வீதியில் அமைந்துள்ளதும் புதிதாக கட்டப்பட்டு வரும் கடைத்தொகுதியில் உள்ள 03 கடைகள் (12 அடி X 27 அடி) வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு:
077 3525157, 077 411 8851

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 17.01.1964
இறப்பு 02.08.2025

**அமரர் J.X.செல்வநாயகம்**

முன்னாள் உதவி அரசாங்க அதிபர்
ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு,
முன்னாள் ஆளுனர் உதவிச் செயலாளர்


1996இல் இருந்து ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபராக கடமை புரிந்தபோது எமக்கு சகல வழிகளிலும் நிர்வாக செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தி எமது கிராம அலுவலர் பிரிவுகளை குறைபாடுகளின்றி செயற்படுத்திய அமரர் J.X. **செல்வநாயகம்** அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

திரு.க.சகாதேவன்
திரு.இ.ஸ்ரீஸ்கந்தராஜா,
திரு.[illegible]
[illegible]

நாரந்தனை,
ஊர்காவற்றுறை.

(S 3758) A

## மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 03 . 1954
மறைவு 02 . 08 . 2025

**பாலசுந்தரம் தனபாலசிங்கம்**

மீசாலை கிழக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் தனபாலசிங்கம் அவர்கள் நேற்று (02.08.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுந்தரம்-கௌரிபிள்ளை (குஞ்சுபிள்ளை) தம்பதியின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா-வள்ளியம்மை தம்பதியின் அன்பு மருமகனும், கமலாதேவி அவர்களின் பாசமிகு கணவரும், குலராசசிங்கம், ஜெயபாலசிங்கம், ஸ்ரீபாலசிங்கம், சிவபாலசிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் மாங்களேஸ்வரி, சிவனேஸ்வரி, சந்திரேஸ்வரி, காலஞ்சென்ற சுகந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுதர்சினி (ஆசிரியர்- யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), சுகிர்ஜினி (சிரேஷ்ட பிரதி ஆணையாளர், உள்நாட்டு இறைவரி திணைக்களம்-கொழும்பு), சுரேந்தினி (ஆசிரியர்-யா/மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்), தர்ஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம் நல்லூர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தகுமார், சர்வேஸ்வரன், வேல்நம்பி, கஜேந்திரன் (ஆசிரியர்-யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், துவாஷிகா, சஞ்சயன், கம்ஷனா, வேனுஜா, அபிலாஷ், ஜயானி, மகினன், நேதுகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்புராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: வசந்தகுமார்
077 417 1321
077 416 1132

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திடீர்...

வார். கடந்த 29ஆம் திகதி காய்ச்சல் காரணமாக அவர் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுள்ளார். இதைத் தொடர்ந்து, நேற்றுமுன்தினம் நெஞ்சுவலி ஏற்பட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள் ளார். பின்னர் அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப் பட்ட நிலையில் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம் குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## 70...

கல்விச் சீர்திருத்தம் தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் எட்டாவது அமர்வில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கல்விப் பின்புலம் என்பது யாழ்ப்பாணத் துக்கு தனித்துவமான காலசாரத்தை கொண்ட விடயமாகும். அவ்வாறு இருந்த போதும் யாழ்ப்பாணத்தில் இன்று கல்வி பெரும் சவாலுக்கு முகங்கொடுத்துள் ளது. அத்துடன், இலங்கையில் வறுமை யான மாவட்டமாக மொனராகலை மாவட்டம் இருந்த நிலையில் தற்போது அது முல்லைத்தீவு மாவட்டமாக மாறி யிருக்கிறது.
இதனால் வறுமையுடன் இணைத்து கல்வி தொடர்பான பிரச்சினையையும் அணுக வேண்டியுள்ளது. வறுமையிருக் கும் இடங்களிலெல்லாம் கல்வி சார்ந்த பிரச்சினையும் காணப்படுகின்றது. கல் வியில் பின்னடைவை சந்தித்துள்ள இடங்களில் வறுமை அதிகரித்துள்ளது. எனவே, புதிய முல்லைத்தீவை, புதிய யாழ்ப்பாணத்தை, புதியகிளிநொச்சியை, புதிய வடக்கை கட்டியெழுப்பவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கிறது.
வடமாகாணத்தில் 982 பாடசாலைகள் உள்ளன. அவற்றில் எழுபதுக்கும் மேற் பட்ட பாடசாலைகள் மூடவேண்டிய நிலை யில் உள்ளன. 10 பிள்ளைகள் கல்வி கற்கும் 35 பாடசாலைகள் வடக்கில் உள் ளன. அதுபோல், 11 தொடக்கம் 20 பிள் ளைகள் கல்வி கற்கும் 64 பாடசாலை களும் 20 தொடக்கம் 50 பிள்ளைகள் கற்கும் 171 பாடசாலைகளும், 50 தொடக் கம் 100 பிள்ளைகள் கற்கும் 174 பாடசா லைகளும் உள்ளன.
இவற்றில் நாற்பதுக்கும் மேற்பட்ட பாட சாலைகள் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியாத நிலைக்குத் தள் ளப்பட்டுள்ளன. எனவே, அனைவரும் புரிந்துணர்வுடனும் ஒற்றுமையுடனும் செயற்பட்டால் இந்த வீழ்ச்சி நிலையில் பல மாற்றங்களை ஏற்படுத்தமுடியும் - என்றார். (அ-ம-26-20-113)

## வல்வைப்...

முன்னெடுக்கப்பட்டது. 1989ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் இந்தியப் படைகளால் நூற் றுக்கணக்கானோர் சுட்டும், வெட்டியும், எரித்தும் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன், நூற்றுக்கணக்கான வீடுகள், வர்த்தக நிலையங்கள், மீன்பிடி வள்ளங் கள் என்பனவும் எரித்தழிக்கப்பட்டிருந் தன. நூலகமாக செயற்பட்டு வந்திருந்த வல்வெட்டித்துறை சனசமூக நிலையமும் தீக்கிரையாக்கப்பட்டது. இந்தக் கொடூரச் செயல்களின் 36ஆவது ஆண்டு நினை வேந்தல் நிகழ்வுகளே நேற்று முன்னெ டுக்கப்பட்டன. நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். (அ-ம-100)

## கல்வியின்...

ஏற்படுத்தியது - இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.
கல்விச் சீர்திருத்தம் தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் எட்டாவது அமர்வில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கல்வியின் முக்கியத்துவம் தொடர்பில் நான் வடக்கு மக்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. ஏனெனில் வலிகள் நிறைந்த காலத்திலும் கல்விக்கு முக்கி யத்துவம் கொடுத்தவர்கள் நீங்கள். வடக்கு மாகாணம் கல்விப் பொதுத்தரா தர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறு களில் பின்னடைவைச் சந்தித்திருக்கின் றது. ஏன் இந்த நிலைமை என்று சிந்திக்க வேண்டும். இந்த விடயத்தில் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (அ-ம-113-26-60-20)

## எல்லைப்...

பாடசாலைகளில் சேவையாற்றுவதற்கு அனைவரும் முன்வரவேண்டும் - இவ் வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் ஹரிணி அமரசூரிய.
கல்விச் சீர்திருத்தம் தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் எட்டாவது அமர்வு, பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தலைமையில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. அங்கு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.
அவர் மேலும் கூறியதாவது:-
தற்போதுள்ள கல்வி முறைமை எல்லோ ருக்கும் சமனானதாகத் தெரியவில்லை. பணம் சார்ந்த சுமைகளை பெற்றோருக்கு ஏற்படுத்தியிருக்கின்றது. பரீட்சைமையக் கல்வியானது மாணவர்களை முடக்கி யுள்ளது. எனவே, கல்விச் சீர்திருத்தம் மிகவும் அவசியம். அது கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்படும். முதற்கட்டமாக தரம் ஒன்று முதல் தரம் ஆறு வரையான வகுப்புகளில் அடுத்த வருடம் சீர்திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.
வடக்கு மாகாணத்தில் ஐந்து மாவட்டங்கள் உள்ளன. ஆனால், எல்லோரும் யாழ்ப் பாண மாவட்டத்தில், குறிப்பாக யாழ்ப்பா ணம் மாநகரத்தில் வேலை செய்வதற்கு ஆசைப்படுகின்றார்கள். ஏனைய மாவட் டங்களுக்கும் குறிப்பாக எல்லைப் பகுதி களில் உள்ள பாடசாலைகளுக்கு முன் னுரிமை கொடுத்துச் செயற்படவேண் டும்.
புதிய கல்வி சீர்திருத்தத்தில், ஒரு மாகா ணம், மாவட்டம் அல்லது பிராந்தியம் மட்டுமல்ல, ஒவ்வொரு மாகாணம், மாவட்டம் மற்றும் பிராந்தியமும் முக்கிய மானது. சமத்துவம் அங்கிருந்து தொடங் குகிறது. நம் நாட்டில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் சம வாய்ப்புகளை வழங்க விரும்பினால், அனைத்து வளங்களையும் ஒரு பிராந்தியத்துக்கு, ஒரு மாவட்டத்துக்கு ஒதுக்கும் முறை தவிர்க்கப்பட வேண்டும் - என்றார்.
இந்தச் சந்திப்பில் கடற்றொழில் அமைச் சர் இ. சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப் பினர் க.இளங்குமரன், கல்வி அமைச் சின் செயலாளர் நலக்க கலுவேவா, வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ். சத்தியசீலன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ் சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பா ளர் வை.ஜெயசந்திரன், கல்வி அமைச் சின் மேலதிக செயலாளர், கல்வி அமைச்சின் தமிழ்ப் பாடசாலைகள், பெருந்தோட்டப்பாடசாலைகள் அபிவி ருத்திப் பிரிவின் கல்விப் பணிப்பாளர் ச.பிரணவதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-ம-26-113)

## வவுனியா...

திறப்புவிழாவைத் தொடர்ந்து, பல்க லைக்கழகத்தின் நிர்வாக அதிகாரிகளு டன் பிரதமர் கலந்துரையாடலில் ஈடுபட் டார். இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை கள் மற்றும் சவால்கள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்தார்.
நிகழ்வில் பிரதி அமைச்சர் உபாலி சமர சிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் மற் றும் துணைவேந்தர் அ.அற்புதராஜா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (அ-ம-110)

## அறிவுறுத்தல்களை...

உரிய நடைமுறைகளைப் பின்பற்றா தோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா அறிவுறுத்தியுள்ளார்.
சான்றுப்பொருள்களைக் காட்சிப்படுத் தும் நடவடிக்கையின்போது பின்பற்றப் படவேண்டிய ஒழுங்குவிதிகள் தொடர் பான அறிவுறுத்தல்கள் நீதவானால் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. இதன் போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள் ளார்.
இதுவொரு நீதிமன்ற நடவடிக்கை என்ப தால், அதற்குரிய கண்ணியத்துடன் அனைவரும்செயற்படவேண்டும்என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ம-26)

## செம்மணி...

பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நீதவான் நீதி மன்றத்தில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மனிதக் கொலை விசாரணைப் பிரிவால் தாக்கல் செய்யப் பட்ட நகர்த்தல் பத்திரத்துக்கு அமைய, என்புத்தொகுதிகளாக மீட்கப்பட்டோரை அடையாளம் காணும் வகையில் இந்தக் காட்சிப்படுத்தல் நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டுள்ளது.
இதன்போது,
1. சான்றுப் பொருள்களைக் காட்சிப்ப டுத்தும் நடவடிக்கை நீதிமன்றத்துக்கு உட்பட்ட நடவடிக்கையாக காணப்படுகின் றமையால், நீதிமன்ற நடவடிக்கைக்கு ரிய கண்ணியம் இதில் பங்கேற்கும் நபர்களால் பேணப்படவேண்டும்.
2. காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர் பாக முறைப்பாடு செய்த நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அவர்கள் தமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட் டது தொடர்பான ஆவணம் ஒன்றை சமர்ப்பிப்பது விரும்பத்தக்கது. ஏனைய நபர்களை அனுமதிப்பது தொடர்பில் வழங்கப்படும் தரவுகள் தொடர்பில் தீர் மானிக்கப்படும்.
3. மேற்படி நடவடிக்கைகளில் பங்குபற் றும் நபர்களின் பெயர், அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச்சீட்டு இலக்கம் அல்லது சாரதி அனுமதிப்பத் திர இலக்கம் உள்ளிட்ட ஏனைய விடயங் கள் நீதிமன்ற உத்தியோகத்தர்களால் பதிவுசெய்யப்படும்.
4. 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் மாத்தி ரம் மேற்படி நடவடிக்கையில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள்.
5. பங்குபற்றும் நபர்கள் மேற்படி நீதி மன்ற நடவடிக்கைகளையோ அல்லது காண்பிக்கப்படும் பொருள்களையோ ஒளிப்படமாகவோ, வீடியோவாகவோ பதிவுசெய்வது தவிர்க்கப்படவேண்டும். இலத்திரனியல் உபகரணங்களை எடுத்துவருவதற்கும் தடை விதிக்கப்பட் டுள்ளது.
6. மேற்படி நடவடிக்கையில் பங்குபற் றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உற வினர்கள், சட்டத்தரணி ஒருவருடன் தோன்றவும் நீதிமன்றம் அனுமதி வழங் குகின்றது.
7. இது ஒரு நீதிமன்ற நடவடிக்கையாகக் காணப்படுவதனால் காட்சிப்படுத்தப்ப டும் சான்றுப்பொருள்களை தொட்டுப் பார்ப்பதோ, கையால்எடுத்துப்பார்ப்பதோ தடை செய்யப்பட்டுள்ளது. ஆகவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் போது சித்துப்பாத்தி இந்துமயானத்தில் ஊடகவியலாளர்கள் ஒளிப்படம் அல் லது வீடியோக்கள் பதிவுசெய்ய அனும திக்கப்படமாட்டார்கள். செய்திகள் சேகரிப் பதற்குத் தடையில்லை.
இந்த நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றுமாறு யாழ்ப்பாணம் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்த ராஜா அறிவுறுத்தியுள்ளார். (அ-ம-26)

## காணாமலாக்கப்...

வரும் நிலையிலேயே இந்த வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளன.
காணாமலாக்கப்பட்டோரின் பெற்றோரி டம் முதற்கட்டமாக வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. அவர்கள் சட்டத்தர ணிகள்மூலம் தமது வாக்குமூலங்க ளைப் பதிவுசெய்துள்ளனர்.
செம்மணியில் வைத்தே வாக்குமூலம் பெறும் நடவடிக்கை இடம்பெற்றுள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## செம்மணிப்...

இதன்போதே, 4 என்புத்தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள் ளன. இதையடுத்து செம்மணிப் புதைகு ழியில் இதுவரை அவதானிக்கப்பட்ட என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 126ஆக உயர்ந்துள்ளது. இவற்றில் 117 என்புத்தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## டிப்பருக்குள்...

சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
நேற்றுமுன்தினம் இரவு குறித்த நபர் தனது வீட்டின் முன்பாக உள்ள ஒழுங் கையில் உறங்கியுள்ளார். இதன்போது சல்லி இறக்குவதற்காகச் சென்றுவிட்டு வந்த டிப்பரே அவர் மீது ஏறியுள்ளது. உயிரிழந்த நபர் டிப்பர் சாரதியின் மைத் துனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்த நபர் டிப்பரின் சக்கரத்துக்குள் சிக்கி உயிரிழந்த விடயம் நேற்று அதிகா லையே தெரியவந்துள்ளது. இதைய டுத்து சாரதி நெடுங்கேணி பொலிஸாரி டம் சரணடைந்துள்ளார். ஒழுங்கையில் அவர் உறங்கிக்கொண்டிருப்பதை அவ தானிக்கவில்லை என்று அவர் வாக்கு மூலம் வழங்கியுள்ளார். மேலதிக விசார ணைகளை நெடுங்கேணி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-110-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்க்கசிவை தடுப்பதற்கும் விரிசலை சீர்செய்வதற்கும்



வீட்டுச்சுவர்களில் ஏற்படும் விரிசல்களுக்கும், கூரை இணைப்புகளுக்கும் வர்ணம் பூசும் போது விரிசலை சீர்செய்து உடனடியாக வர்ணம் பூசுவதற்கு இரசாயனப்பொருட்களைதற்போது எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

உலகத்தரமிக்க இராசாயனப் பொருட்களை Finex ஸ்தாபனத்தாரின் வட மாகாண ஏக விநியோகஸ்தர்கள்

வடமாகாணத்தில் முதன்முறையாக அறிமுகப்படுத்தியவர்கள்

North and East Engineering FINEX
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீட்டர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீட்டர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
Whats app:-
**+61 421 290 240**

(CS/58843) J-1

## காணி விற்பனைக்கு

- ➤ மானிப்பாய் உடுவில் வீதியோரமாக 10 பரப்பு காணி
- ➤ Airport க்கு அண்மையில் மயிலிட்டி வீதியோரமாக 75 பரப்பு காணி
- ➤ திருநெல்வேலி ஆடியபாதம் வீதியோரமாக 2 1/2 பரப்பு காணி
- ➤ நல்லூர் கோவில் வீதியோரமாக 2 பரப்பு காணி

தொடர்புகளுக்கு: **077 221 6683**

(CS 58698) E

## உடனடி வேலைவாய்ப்பு

வடமராட்சியில் நன்மதிப்பை பெற்ற பிரபல்யமான, பல கிளைகளைக் கொண்ட வெதுப்பக உற்பத்தி நிறுவனத்திற்கு பல்வேறுபட்ட வேலை வாய்ப்புகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

- ✣ உற்பத்தியாளர்
- ✣ விற்பனையாளர்
- ✣ பொதி செய்பவர்
- ✣ களஞ்சியக் காப்பாளர்
- ✣ கிளை முகாமையாளர்

போன்ற பல்வேறுபட்ட வேலைவாய்ப்புகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. மேற்கூறப்பட்ட வேலைகளுக்கு அனுபவம் உள்ளவர்களும், வேலை பழக விரும்புவர்களும் விண்ணப்பிக்கலாம்.

(குறிப்பு: இருபாலரும் விண்ணப்பிக்கலாம்)

தொடர்புகளுக்கு:
**077 269 0764**

(CS 58999)E

## அவசர தேவை

சிறுநீரகம் பாதிப்படைந்த நபர் ஒருவருக்கு அவசரமாக O+ வகையான சிறுநீரகம் தேவைப்படுகின்றது.
வயதெல்லை 30 - 50

தொடர்பு:- **076 476 7400**

## தேவை

கொழும்பில் உள்ள மிளகாய்த்தூள் மில்லுக்கு பிளேட் மாற்ற தெரிந்த, ஈர அரிசிமா அரைக்க வறுக்கும் பதம் (மெசின்) பார்க்க தெரிந்த ஆட்கள் தேவை. தங்குமிடம் தரப்படும்.
சம்பளம் 1 நாளுக்கு 4000/= வரை சம்பாதிக்கலாம்.

தொடர்புகளுக்கு: **075 800 5057**

## VACANCY

We are Currently inviting applications for our well equipped with modern machinery Very advanced "Rehabilitation and physio Department" at **Venus Speciality Hospital (PVT) LTD** Jaffna

Physiotherpists/ Marketing Manager/ Digital Marketer/ Rehabilitation Coordinator
All positions are with good Salary Package

Venus Speciality Hospital (PVT) LTD
136, Palaly Road Kantharmadam, Jaffna.

Contact : 070 651 7625 / 021 222 4172
Email : hrmvenus73@mail.com

## நல்லூர் திருவிழா சிறப்பு சலுகை

**Saree Ironing**

- ➤ Official Saree - 500.00
- ➤ Pattu Saree - 650.00
- ➤ Wedding Saree - 800.00

Jenik Beauty Choice
இடம் : கொக்குவில், யாழ்ப்பாணம்

தொடர்பு: **+9476 415 9493**

(CS 58989) E

## கிட்ணி தேவை

**Q+ இரத்தவகையை சேர்ந்த கிட்ணி தேவை**

தொடர்புகளுக்கு:
**076 187 4464**

(CS 37271) E

## காணி விற்பனைக்குண்டு

தெல்லிப்பழையில் K.K.S Road இல் இருந்து 140 மீற்றர் உள்ளே, வயலிருப்பை வைரவர் கோயிலுக்கு அருகாமையில் 5 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு

தொடர்பு: **071 598 3245**
**077 360 4202**

(CS 58988) E

## அண்ணா பொதிகள் சேவை



யாழ்ப்பாணம்

- UK - 1,350/- 16+
- France - 2,050/- 16+
- Germany - 1,950/- 16+
- Canada - 2,600/- 16+

தேவை
வேலையாட்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
யாழ்நகரத்துக்கு அண்மையில் இருப்போர் விரும்பத்தக்கது.

**075 330 5500 / 070 330 5500**

## அலுவலக வேலைவாய்ப்பு

கொழும்பு வெள்ளவத்தையில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு 18 - 35 வயதிற்கும் இடைப்பட்ட ஆண் இருவர் தேவை.

**பதவி வெற்றிடங்கள்**

- Procurement Executive
- Supermarket Supervisor

தொடர்புகளுக்கு:
**076 690 8987**

## PERSONAL CLASS

**Spoken English with Grammar**

35 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் கற்பிக்கப்படுகிறது.

187/11, Kilner Lane, Vannarpannai, Jaffna.
**075 209 5975 / 077 639 3401**

(CS 59012) A

## காணி விற்பனைக்கு

55 New செம்மணி வீதி, கல்வியங்காட்டில் 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு.
Point Pedro வீதியில் இருந்து 350m நல்லூர் கோவில் - 1.7 km

தொடர்பு: **077 185 4870**

(CS 57821) E

## Room வாடகைக்கு

நல்லூர் கோவிலுக்கு அருகாமையில் Room வாடகைக்கு உண்டு.
மாணவிகள் விரும்பத்தக்கது.

**0049 1573 6567047** (WhatsApp)

(CS 58601) E

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர்கள் உடன் தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது. ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்

- ➤ சமையலாளர் (தகுந்த சம்பளம் வழங்கப்படும். வயது எல்லை 20 - 25)
- ➤ சமையல் உதவியாளர் (வயது எல்லை 20 - 50)
- ➤ தோட்டப் பராமரிப்பாளர் - இத்துறை சார்ந்த அனுபவம் விரும்பத்தக்கது. (வயது எல்லை 20 - 25)
- ➤ வரவேற்பாளர் (Receptionist) - (தமிழ், ஆங்கிலம், சிங்களம் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது, அடிப்படைக் கணினி அறிவு மற்றும் 1 வருட அனுபவம் அவசியம் (வயது எல்லை 20 - 40)

தொடர்புகளுக்கு: **077 251 4984, 077872 9806**

நேரில் சமூகம்தர வேண்டிய முகவரி:
195, கோயில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(195, Temple Road, Nallur, Jaffna)

(CS 45649) E

## வீடு விற்பனைக்கு

யாழ். நல்லூர், கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நாவலர் வீதியில் அமைதியான ஆன்மீகச் சூழலில் 3 1/2 பரப்பு காணியில் அமைந்த மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
10 படுக்கையறைகள், 08 குளியலறையுடன் கூடிய கழிப்பறைகள், வரவேற்பறை, 2 சமையலறை, வாகனத்தரிப்பிடம், படுக்கையறைகளில் 05 குளிரூட்டப்பட்டவை. Generator வசதி உண்டு.
**Three Face Current. No Brokers**

தொடர்புகளுக்கு
**077 716 6028**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.08. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை; —இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேள்அலறச்
சென்றான் எனப்படுத லால்.

— நாலடியார்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ஆடி 18 ஞாயிற்றுக்கிழமை (03.08.2025) சிகரம் :150

# தேய்கிறதா வடக்கு?

## க.பொ.த.(சா/த) முடிவுகளை முன்வைத்து ஓர் அலசல்

குு.பிரதீபன்
*விரிவுரையாளர்*
*கல்வியியல் துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*




### அறிமுகம்

இலங்கையின் கல்விச் சூழமைவில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப்பரீட்சை, மற்றும் கல்விப் பொதுத் தராதர பத்திர உயர்தரப் பரீட்சை ஆகிய மூன்று பரீட்சைகள் மாணவர்களுடைய கல்விசார் அடைவின் குறிகாட்டிகளாக கல்வித்துறைசார் அனைத்துத் தரப்பினராலும் நோக்கப்படுகின்றன. இந்நிலையில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் வடமாகாணத்தினுடைய அடைவுகள் முன்னிலை வகிக்கின்றபோதிலும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இம்மாகாணத்தினுடைய அடைவுகள் போதுமானவையல்ல என்பதாக பல்வேறு தரப்பினராலும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்தவுடன் இவ்வாறான விமர்சனங்கள் பெருமளவில் முன்வைக்கப்படுவதும் காலஓட்டத்தில் இவை வலுவிழந்து போவதும் மீண்டும் பரீட்சைப் பெறுபேறுகளின் வெளியீட்டைத் தொடர்ந்து மீண்டும் மேலெழுவதுமாகவே வடமாகாணத்தினுடைய நிலைமை சென்றுகொண்டிருக்கின்றது. இந்த விமர்சனங்களில் பெரும்பாலானவை கல்வித்துறைசார் தரப்பினர் தங்களிற்கிடையில் ஒருவர் மீதொருவர் தங்களுடைய பொறுப்புடைமையையும் வகைக்கூறும் தன்மையையையும் சாட்டுதல் செய்து தப்பித்துக்கொள்கின்ற அடிப்படையில் அமைந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த விமர்சனங்களினுடைய உண்மைத்தன்மை தொடர்பில் ஆராய்வதையும், விமர்சனங்களிலிருந்து மீண்டெழுவதற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய உத்தி தொடர்பில் பிரேரிப்பதையும் இந்தக்கட்டுரை நோக்காகக் கொண்டுள்ளது.

### முன்வைக்கப்படுகின்ற ஒப்பீட்டு முறைமை பொருத்தமானதா?

இங்கு மாகாணத்தினுடைய அடைவை இரு வேறு அடிப்படைகளில் வியாக்கியானம் செய்யமுடியும். ஒன்று ஏனைய மாகாணங்களினுடைய அடைவுடன் ஒப்பிட்டு வடமாகாணத்தின் அடைவினை வியாக்கியானம் செய்தல் ,மற்றையது எதிர்பார்க்கப்பட்ட உத்தேச இலக்குடன் ஒப்பிட்டு வியாக்கியானம் செய்தல். இங்கு முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்கள் மேலே குறிப்பிட்ட முதல் வகுதிக்குரிய ஒப்பீட்டின் அடிப்படையிலேயே முன்வைக்கப்படுகின்றன. ஏனைய மாகாணங்களினுடைய அடைவுடன் ஒப்பிட்டு வடக்கு மாகாணத்தின் அடைவினை வியாக்கியானம் செய்கின்ற இந்த முதல் வகுதிக்குரிய முறைமையை நோக்கின், இங்கு கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், குறிப்பாக உயர்தரத்திற்கு தகுதி பெற்ற மாணவர்களின் சதவீத அடிப்படையில் மாகாணங்களை வரிசைப்படுத்துவதன் ஊடாக 'வடக்கு மாகாணமானது எட்டாவது மற்றும் ஒன்பதாவது நிலையில் காணப்படுகின்றது' என்கின்ற மாகாணத்தின் அடைவை வியாக்கியானம் செய்யும் முறைமை காணப்படுகின்றது. இம் முறைமை ஏற்றுக்கொள்ளத்தக்கதா? இந்நிலைமையை வடமாகாணத்தினுடைய கல்வி அடைவு மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது என்பதற்கான ஒரு சான்றாகக் கொள்ளப்பட முடியுமா? இவை தொடர்பில் ஆராயப்பட வேண்டியுள்ளது.

### தாய்மொழி, சமய பாடப் பரீட்சைகளும் காரணமா?

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற தமிழ்மொழிமூல மாணவர்கள் தாய்மொழியாக, தமிழ்மொழிப் பரீட்சைக்கும் இப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற சிங்களமொழிமூல மாணவர்கள் தாய்மொழியாக சிங்கள மொழிப் பரீட்சைக்கும் தோற்றுகின்றனர். அதேபோன்று பெரும்பாலான தமிழ் மொழிமூல மாணவர்கள் சைவ சமயத்தை ஒரு பாடமாகக் கற்கின்ற அதேவேளை பெரும்பாலான சிங்கள மொழி மூல மாணவர்கள் பௌத்த சமயத்தை அதற்குப் பதிலாக கற்கின்றார்கள். இங்கு தமிழ் மொழி வினாத்தாள் மற்றும் சிங்கள மொழி வினாத்தாளினுடைய கடினச் சுட்டியிலுள்ள வேறுபாடு இவ்வினாத்தாளின் அடைவு வீதத்தில் அல்லது சித்தி வீதத்தில் கணிசமான செல்வாக்கை செலுத்தும்.

அதேபோன்று சைவசமயம், பௌத்த சமயம் ஆகிய வினாத்தாள்களினுடைய கடின சுட்டிகளின் வேறுபாடும் அந்தப்பாடங்களினுடைய அடைவு வீதத்தில் அல்லது சித்தி வீதத்தில் குறிப்பிடத்தக்களவில் செல்வாக்குச் செலுத்தும் என்பதும் இங்கு நோக்கத்தக்கது. இதற்கு மேலதிகமாக, தாய் மொழிப் பரீட்சை வினாத்தாளா னது கட்டுரை, கடிதம் போன்ற அகவயத்தன்மையான வினாக்களைக் கணிசமான அளவில் உள்ளடக்கிக் கட்டமைக்கப்படுகின்றது. எனவே இப்பாட விடைத்தாள்களின் மதிப்பீட்டில் பரீட்சகர்களின் புள்ளியிடல் தொடர்பான தேர்ச்சித்தன்மை மற்றும் மனப்பாங்கு என்பன செல்வாக்குச் செலுத்தும் என எதிர்பார்க்கலாம். தமிழ்மொழிமூலப் பரீட்சார்த்திகளின் தமிழ், சமயம் ஆகிய விடைத்தாள்களும் முற்றிலும் வேறுபட்ட இரு இனக்குழும ஆசிரியர்களால் மதிப்பிடப்படுவதால் அந்த இனக்குழுமம் சார்ந்து மாணவர்களுக்குப் புள்ளிவழங்கல் தொடர்பிலான மனப்பாங்கு ஆசிரியர்களிடத்தில் வேறுபட்ட வகையில் கட்டமைக்கப்பட்டிருக்கலாம். இத்தகைய மனப்பாங்கு மற்றும் தேர்ச்சித்தன்மையின் வேறுபாடும், இவ்விரு வேறுபட்ட அளவுகோல்களின் அடிப்படையில் அளவிடப்பட்ட அளவீடுகளையும் உள்ளடக்கியுள்ள இறுதிப் பெறுபேறுகளினடிப்படையிலான ஒப்பீட்டு முறைமையின் பொருத்தப்பாட்டினைக் கேள்விக்குள்ளாக்குகின்றது.

### வரலாறு, சித்திரப் பாடங்களில் சிங்களச் சொல்லாட்சி

அதேபோன்று வரலாறு மற்றும் சித்திரம் போன்ற பாடங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள அதீத சிங்களமொழிச் சொல்லாட்சியும், சிங்கள இனத்தினுடைய கலாசார விடயங்களின் அதீத உள்ளடக்க அளவும், அப்பாடங்களில் சிங்களமொழிமூல மாணவர்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்மொழிமூல மாணவர்களின் அடைவில் குறிப்பிடத் தக்க வீழ்ச்சியினை ஏற்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கலாம். அதேபோன்று, மேலேகுறிப்பிட்டவாறு தாய்மொழிப் பரீட்சையினை ஒத்த வகையில், சித்திரப் பாடத்தினுடைய வரைதல் பகுதிகளினுடைய புள்ளியிட லும் பெருமளவுக்கு அகவயத்தன்மையுடையது என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே இப்பகுதிகளின் புள்ளியிடலிலுள்ள வேறுபாடுகளும் ஒப்பீட்டின்போது கருத்திற் கொள்ளப்பட வேண்டும். இந்நிலையில், இவ்வாறான வேறுபாடுகள் தொடர்பில் கருத்திற்கொள்ளாமல் தமிழ்மொழிமூல மாணவர்களின் அடைவையும் சிங்களமொழிமூல மாணவர்களின் அடைவையும் ஒன்றாக வெறுமனே அடைவு சதவீதத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்தி அதனடிப்படையில் வடக்கு மாகாணத்தினுயை அடைவை ஒப்பீட்டுரீதியில் விபரிப்பதென்பது முழுமையற்ற மற்றும் முறைமையற்ற தொன்றாகவே அமையும்.

### தொகுதிப்பாடப் பரீட்சை அடைவுகள்

அதேபோன்று க.பொ.த சாதாரண தரத்தில் மூன்று பாடத் தொகுதிகள் மாணவர்களுக்குரிய விருப்பத்தெரிவுக்காக உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொகுதியிலும் உள்ளடக்கப்பட்ட பாடங்கள் வேறுபட்ட கடினத்தன்மை மற்றும் உள்ளடக்க அளவு கொண்டனவாக அமைகின்ற அதேவேளை அப்பாடங்களினுடைய வினாத்தாள்களிடையேயும் கூட கடினத்தன்மையில் வேறுபாடு காணப்படும் வாய்ப்பும் உள்ளது.

உதாரணமாக குறித்த ஒரு தொகுதியில் ஆங்கில இலக்கியத்துடன் சங்கீதம், சித்திரம், நடனம் போன்ற பாடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம்மூன்று பாடங்களிலும் மாணவர்கள் பெற்ற பெறுபேறுகளை ஒரே தொகுதியாக்கி, பெற்றுகொண்ட பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களை வரிசைப்படுத்தி அவர்களின் அடைவை வியாக்கி யானம் செய்யமுடியுமா?

இதே போன்ற ஒரு நிலைமையை நாங்கள் நடைமுறையிலுள்ள மாகாணங்களுக்கு இடையிலான அடைவு ஒப்பீடு தொடர்பிலும் சிந்திக்கமுடியும். ஒவ்வொரு மாகாணத்திலும் எத்தனை சதவீதமான மாணவர்கள் இந்தப்பாடத் தொகுதிகள் ஒவ்வொன்றிலுமிருந்து ஒவ்வொரு பாடத்தையும் தெரிவு செய்கின்றார்கள்? அப்பாடத்தினுடைய கடினத்தன்மை மற்றும் வினாத்தாளின் கடினத்தன்மை எவ்வாறு உள்ளது என்பது தொடர்பிலும் இவ்வடைவுகள் மாகாணத்திலிருந்து உயர்தரத்துக்கு சித்திபெறும் மாணவர்களின் சதவீதத்தில் எத்தகைய செல்வாக்கைச் செலுத்துகின்றது

*(அடுத்த வாரம் தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனந்தி

## போரின் கவிதை 22

# துளசி

எனது ஐந்தாம் வகுப்பு
பாலர் நினைவுகள்...
அர்த்தமற்ற இறப்புகளையும்
முடிவில்லாத் துன்பங்களையும்
தேகமெங்கும் தாங்கிக்கொண்டு..
கல்வி மட்டுமே காலத்தின் வாழ்வு
எனக் கருதிக் கிடந்த காலங்கள்..

'குடிகார அப்பா' பற்றிய ஓவியம்
கண்காட்சிக்கு வரைய வேண்டும்
அதன் விளைவு பற்றியும் நான்
விபரிக்கவேண்டும்....
பத்து வயதுப் பிள்ளை என்
உண்மை வாழ்வை வரைவதற்கான
சந்தர்ப்பத்தை காலம் எனக்குத் தந்தது...

இப்போது போல அல்ல
அப்போதெல்லாம்.....
பிள்ளைகளின் கல்வி பற்றி
பெற்றோருக்குத் தெரியாது..
பாடங்களின் கடினம்..
பெறுபேறுகள்பற்றி
எவரும் அலட்டிக்கொள்வதில்லை

போரின் கொடுமைக்குள்
மாட்டிக்கொள்ளாமல் மீண்டு வந்தால்
போதும் என்றுதான்
பெற்ற மனங்கள் அங்கலாய்க்கும்..

கண்காட்சியின் ஓவியம் பற்றி
அம்மாவிடம் கேட்டுக்கொண்டேன்..
அக்கறைப்படாத அம்மாவை
தொல்லை கொடுத்து
அதன் கட்டாயத்தை வற்புறுத்தி.. நச்சரித்து..
ஓவியம் பற்றி எதுவுமே தெரியாத அம்மா..
அடுத்த வீதியின் மூலை வீட்டு
வைத்தி மாமாவை
அறிமுகம் செய்ய..

'வைத்தி' ஓர் அழகான ஓவியன்..
வண்ணங்களைப் பிசைந்து
எண்ணங்களை அழகாக்கி
எறிந்து விளையாடும் கைவண்ணம் ..
வீட்டில் ஓவியம் வரைய
ஒதுக்கிய கூடத்தில்..
நிறைந்த வர்ணங்கள்.

எனக்குப் பிடித்த சிவப்பு நிறத்தில்
அழகிய ரோஜாப்பூவும்
சூரியன் மறையும் மலையின் வடிவும்
தத்ரூபமாக சுவரில் தொங்கின.

பத்து வயதுச் சிறுபிள்ளை நான்
அம்மாவின் சட்டைக்குள் மறைந்து
நிற்க.. என் கையைப் பிடித்து..
அழைத்து ஓவியங்களைக் காட்டி
பயந்து வடிந்த என்முட்டைக் கண்களுக்கு
வியப்பை ஊட்டிய 'வைத்தி' என்னும்
ஓவியக்கலைஞன்.

ஆறடி உயரம் அழகிய ஓவியன்
பெண்கள் மயங்கும் பிரமாண்ட
அழகன் ஒரு சிறுமியின் மனதில்..
ஆழமாய்.. மனவேர் வரை சென்று
கன்னக்குழிச் சிவப்பை அப்படியே
படம் பிடித்த அழகன்..

குடிகார அப்பாவை
கோடுகளைக் கிழித்து..
அவன் அம்மாவுக்கு அடிப்பதாக
வரைந்து ...காயங்களோடு
என்னை வரைந்து
தம்பியை அம்மாவின் இடுப்பில்
மூக்கு வடிய இருத்தி....
'குடிக்காதீர்கள் குழந்தைகள் பாவம்'
என்பதை தத்ரூபமாக....
சொல்லி முடித்தவன்.
எக் காலத்திற்கும் பொருந்தும்
அதிசய ஓவியத்தை எனக்காக
வரைந்த அந்தக் கைகளையே
சிந்தித்துக்கொண்டிருந்தேன்.
எத்தனை திறமை...கற்பனை...

அந்த ஓவியம் கண்காட்சியில்
பலரின் மனதைத் தொட்டது
பத்து வயதுக்குக்கூடிய
பிரமாண்ட அறிவு
பெருக்கெடுத்தோடிய
அந்த நொடி.. அந்த விபரிப்பு
வைத்தி என்னும் ஓவியன்
எனக்குத் தந்தது.

அந்தச் சிறுவயதில்
இந்த ஓவியன் கீறிய
காலத்தின் பதிவுகள்
என் மனமெங்கும் அடுக்கடுக்காய்
பதிந்துகொண்டன...
அந்தப் பொழுதுகள்
என்னையும் ஓவியம் வரையத்
தூண்டியது.. ...
நானும் தூரிகை பிடிக்கத்
தொடங்கினேன்....

வைத்தியின் மாணவியாக
சிறுவண்டின் கவிதையாக..
காண்பதெல்லாம் ஓவியமாக
வரைய ஆசைப்பட்டது..
அந்த ஓவியக் கடவுளின்
அடிமையாகி.. குருவின் பக்தையாக
நான் உருமாறிப்போனேன்.
வர்ணக் கட்டிகளுக்கும்
வெள்ளைத் தாளுக்கும்
வசதியில்லா என் வாழ்வில்..
ஊடகத்தையும்.. கருத்தையும் கொடுத்து
ஓவியமாக்கி.. சிறுபிள்ளை எனை
மகிழ்வித்த அந்த ஆசானை நினைத்தால்
இறையருள் போல இதயம் கனக்கும்.
ஓர் இரவு காத்துக்கொண்டிருந்தது
மழை பெய்யாத வானம் நீர் கசிந்தது..
சுற்றியிருந்தவர் எல்லாம்
கத்திக்கொண்டிருந்தார்கள்
நடந்தது புரியாமல் என் மௌனம்..
கலைந்து அம்மாவிடம் கேட்கிறது...

அந்தத் தெருவில் வைத்தியின் வீடு
மூலையில் முடங்கியிருக்கும்..
இராணுவம் வரிசையாக
அணிவகுத்துச் செல்லும்..
நாய்களின் சப்தம் அடங்கியதும்

மனிதர்கள் வெளியே வருவார்கள்
யாரும் 'மம்மல்' பொழுதுகளில்
வெளியே வருவதில்லை....

பகலும் இரவும் சந்திக்கும்
அந்தக் கொடிய பொழுதில்..
அந்தக் கருகிய மாலையில்..
தன் வீட்டு மதிலோரம்....
குப்பை கூட்டி அள்ளிக்கொண்டிருந்த...
நெட்டையாகத் தெரிந்த ...
அந்த ஓவியனின் நெற்றியில்
ஒளிந்துநின்ற இராணுவம்
துப்பாக்கியால் சுட்டது...

ஒரு நொடியில் அக் கலைஞனின்
உயிர் போய்விட்டது..
எனக்குப் பிடித்த சிவப்பு நிறத்தில்
இரத்தம் பரவி..
காப்பாற்ற யாருமின்றி எதுவுமே
அறியாத ஓர் அப்பாவி ஓவியனின்
வாழ்வு 'சாதாரணமாக' ஒரு சிப்பாயின்
குண்டுக்கு இரையாகிப்போனது.
தலைசிதறிக்கிடந்த பிணத்தை
கால்களால் உதைத்து...தள்ளி ஆவேசமாக ..
கடைசி மூச்சை விடமுடியாமல்
அந்தக் கலைஞனை... கேவலம் செய்தார்கள்..

அன்று முதல் சிவப்பு நிறம்
சிந்தனையை உடைக்கும் நிறமாய்
அவலத்தின் சின்னமாய்
அபாயத்தின் அறிகுறியாய்...
வெறுப்பை உமிழும் நிறமாக
என் சிந்தனைகளில்
மாற்றம் கொண்டது...

இங்கு கேள்வி கேட்க யாருமில்லை
நியாயங்கள் கேட்கமுடியாத
கைதிகளாய் வீதி எல்லாம் மக்கள்..
வேடிக்கை பார்க்கும் கூட்டமாக
பிணங்களைத் தூக்கும்..
பித்துப் பிடித்தவர்களாக...
கத்திக்கொண்டு மட்டும்..
காலத்தை வசைபாடும்
மனிதர்கள்.....
இந்தப் போருக்கு எவ்விதத்திலும்
சம்பந்தமில்லாத ஓர் அப்பாவி
இளமையின் தொடக்கத்தில்.....
கனவுகளை மூளையில் தேக்கிக்கொண்டு
எவ்வளவு அற்புதமான ஓவியங்களைப்
படைத்த கலைஞனை..
எவ்வளவு இலகுவாகக்
கொன்றுமுடித்தார்கள்!

நாற்பது வருடங்கள்
கரைந்துபோனது ....
அந்தப் பிரதான வீதியில்....
மூலை வீடு வைத்தி எனும்
ஓவியனின் வரலாறு தெரியாத...
அந்த மூலை....இன்றும் இருள் சூழ்ந்து...

இந்த ஓவியன் இருந்தால்..
எங்கள் தேசத்தின் சோகங்களையும்
பழிவாங்கல்களையும் எத்தனை
அழகாக வர்ணம் தீட்டிமுடித்திருப்பான்....
காலத்தின் ஒவ்வொரு கவிதைகளையும்
அவனது தூரிகைகள்...அழகாக அழுதபடி
வரைந்து ஆதாரங்களாக தந்திருக்கும்.
வளர்ச்சியடைந்த காலங்கள்
பிரமாண்டமான கட்டடங்கள்
இன்னும் அந்த மூலை அப்படியே.....
தினமும் அந்த இடத்தைத் தாண்டும்போது
வைத்தி எனும் ஆசானின் இறப்பும்
அதில் அழிந்துபோன வரலாறும்....
எங்கேனும்........
யாருக்கேனும் சொல்லிவிடத்துடிக்கும்.

பற்றி எரியும் மன நெருப்பும்....
எனக்குள் மட்டும் காவிக்கொண்டு
என் எச்சங்களுக்குப் பகிர்ந்து ..
நியாயமற்ற இறப்புகளுக்காக வருந்தி
மனதுக்குள் புதைத்து...
வாழ்ந்துகொண்டிருக்கும்...
ஒரு மாணவி ....தூரிகையின் பிள்ளை.


அந்தப் பிஞ்சு வயதில் ஏற்பட்ட வலி
காலத்திற்கும் ....
என்னோடு வந்துகொண்டிருக்கிறது
அதை மறைக்க முடியவில்லை...
மறதி என்னும் நோய் எனக்கு
ஆரம்பித்தும்...பலதை மறக்கமுடிந்தாலும்..
இந்த நினைவு...அழுது அழுது
அப்படியே வாழ்ந்துகொண்டிருக்கிறது..

போர் பலிகொண்ட இந்த ஓவியனின்
பெயர் சொல்ல யாருமில்லை!
போரில் தப்பிய மாணவி எனக்கு
அந்த மரணம் எனது நினைவை விட்டு....
நீங்காமல் மனதைப் பிசைந்து
மறுகிக்கொண்டிருக்கிறதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ நிலாந்தன்

# செம்மணி



# திறந்து விட்டிருக்கும் வாய்ப்புகள்

சிலநாள்களுக்கு முன் திருநெல்வேலி மரக்கறிச் சந்தையில் ஒரு கடைக்கு முன் இருவர் கதைத்துக்கொண்டிருந்தார்கள். ஒருவர் சொன்னார் "கர்மா விடாது. திரும்பி வரும். பாருங்கள் செம்மணியில் அது திரும்பி வருகிறது." என்று. அதற்கு மற்றவர் சொன்னார் "ஓமோம். அது தானாகத் திரும்பிவருகிறது. எதற்கோ கிண்டப் போய் எலும்புக் கூடுகள் வெளிவருகின்றன" என்று.

அவர்களுடைய கர்மா பற்றிய உரையாடலை தனியே வைத்துக் கொள்ளலாம். ஆனால் செம்மணி விடயத்தில் அவர்கள் சொன்னதில் ஓர் உண்மை இருக்கிறது. கிருசாந்தி குமாரசுவாமியின் வழக்கில் செம்மணி விடயம் வெளியே வந்ததற்கு காரணம் அதில் சம்பந்தப்பட்ட ஓர் இராணுவ இளநிலை அதிகாரி அரசுக்கு எதிராக வாக்கு மூலம் வழங்கியமைதான். அதுபோலவே அண்மையில் செம்மணிப் புதைகுழி மீண்டும்திறக்கப்பட்டமைதிட்டமிட்டுநிகழ்ந்த ஒரு விடயம் அல்ல. அங்கு சித்துப்பாத்தி மயானத்தில் மின்தகன மேடை ஒன்றை அமைப்பதற்காக நிலத்தை அகழ்ந்த போதுதான் எலும்புக்கூடுகள் வெளிப்பட்டன. எனவே இந்த இரண்டு விடயங்களிலும் இயற்கை தமிழ் மக்களுக்கு உதவியாக இருக்கிறது. இதைத்தான் கடந்த வாரத்துக்கு முதல் வாரம் ரில்கோ சந்திப்பின்போது யாழ். பல்கலைக்கழகத்தின் துறைத்தலைவர் ஒருவர் 'அது கடவுள் செயல்' என்று சொன்னார். அதைத்தான் கடந்த வாரம் யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடந்த நிகழ்வில் பேசிய ஐங்கரநேசன் "செம்மணிப் புதைகுழிகள் தந்துள்ள அரியவாய்ப்பை எமது தலைவர்கள் சரியாகப் பயன்படுத்தி நீதிக்கான,விடுதலைக்கான எமது பயணத்தை வேகமாகத் தொடர முன்வரவேண்டும்." என்று கூறினார்.

அதுதான் உண்மை. தமிழர்களாக முயற்சிக்காமல் செம்மணி ஒரு வாய்ப்பை தமிழ் மக்களுக்கு திறந்துவிட்டிருக்கிறது. அதிலிருந்து தொடங்கி தமிழ் மக்கள் எப்படி நீதிக்கான போராட்டத்தை முடுக்கிவிடுவது? அதிலும் குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரும் இலங்கைக்கான ஐ.நா. அலுவலகமும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைப் பாதுகாக்கும் விதத்தில் செயற்படுகின்றன என்று தமிழ் மக்கள் குற்றச்சாட்டை முன்வைக்கும் ஒரு காலகட்டத்தில், அடுத்த ஜெனிவா கூட்டத் தொடர் செப்ரெம்பர் மாதம் தொடங்கவிருக்கும் ஒரு பின்னணியில்,செம்மணி திறந்துவைத்திருக்கும் வாய்ப்புகளை தமிழ்த் தரப்பு எப்படிக் கையாளப் போகின்றது?

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியப் பேரவை முன்னெடுக்கும் முயற்சி அதாவது ஐ.நா.வுக்கு கூட்டுக்கடிதம் எழுதுவது என்பது காலப் பொருத்தமானது. அதில் விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால் இருப்பதில் இருந்துதான் அரசியலைத் தொடங்கலாம். இப்போதுள்ள நிலைமையில் தமிழ்த் தரப்பிடம் உள்ள வளங்கள் பிராந்திய மற்றும் அனைத்துலக நிலைமைகள் போன்றவற்றியின் பின்னணியில், கடிதம் எழுதத்தான் வேண்டும்.

அந்தக் கடிதத்தை தமிழரசுக் கட்சிக்கு அனுப்பியிருப்பதாகவும் அவர்களுடைய பதிலுக்காகக் காத்திருப்பதாகவும் கஜேந்திரக்குமார் தெரிவித்திருந்தார். இதுதொடர்பில் தமிழரசுக் கட்சி முடிவெடுக்க முன் இந்தக்கட்டுரை எழுதப்படுகிறது. இந்த விடயத்தை முன்வைத்து தமிழரசுக் கட்சியை அம்பலப்படுத்தும் உள்நோக்கம் முன்னணியிடம் இருக்கலாம் என்ற சந்தேகம் தமிழரசுக் கட்சியினர் மத்தியில் காணப்படுவது இயல்பானதே.

ஆனால்,தமிழரசுக் கட்சி தன்னை ஒரு மூத்த கட்சியாகவும் பெரிய கட்சியாகவும் முதன்மைக் கட்சியாகவும் கருதுகின்றது. தான் என்ன செய்ய வேண்டும் என்பதனை மற்ற கட்சிகள் தனக்கு பாடம் எடுக்கக் கூடாது என்ற பொருள்பட சிவஞானம் அண்மையில் கருத்து தெரிவித்திருந்தார். ஆயின் உள்ளதில் பெரிய கட்சி என்ற அடிப்படையில் அவர்களுக்குத்தான் பொறுப்பு அதிகம். ஜெனிவாவை கையாளுவது தொடர்பில் அவர்கள்தான் முன்கை எடுத்திருந்திருக்க வேண்டும்.தமிழரசுக் கட்சி அந்தக் கடிதத்தில் கையெழுத்திடுமாக இருந்தால் அவர்களுடைய கையெழுத்துகள்தான் அதிகமாகவும் இருக்கும். ஏனென்றால் அவர்களுக்குத்தான் அதிக நாடாளுமன்ற ஆசனங்கள் உள்ளன.

இந்த இடத்தில் ஒரு முன்னனுபவத்தைக் கூறவேண்டும். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 2021இல்,இப்படி ஒரு கடிதம் எழுதும் விடயத்தை மன்னாரைச் சேர்ந்த சிவகரன் முன்னெடுத்த பொழுது.முதல் சந்திப்பில் சுமந்திரன் காணப்பட்டார்.கஜேந்திரகுமார் அதற்கு வந்திருக்கவில்லை. கஜேந்திரகுமாரையும் கொண்டு வந்தால் நல்லது என்று சுமந்திரன் வலியுறுத்தினார்.அந்தச்சந்திப்பில் பங்குபற்றிய தமிழ் சிவில்சமூக அமையத்தைச் சேர்ந்த மதகுருவும் ஏனையவர்களும் கஜேந்திரகுமாரை அங்கே கொண்டுவர வேண்டும் என்று முயற்சித்தன் விளைவாக அதற்குள் கஜன் வந்தார். அவர் வரும் பொழுது ஒரு முக்கியமான விடயத்தை வலியுறுத்தினார். பொறுப்புக்கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்பதே அந்த கோரிக்கையாக இருந்தது.அந்தக்கோரிக்கை பின்னர் கடிதத்தில் இணைக்கப்பட்டது.

எனவே இவ்வாறான முயற்சிகளில் யார் முன் கை எடுப்பது என்பதல்ல முக்கியம்.கட்சி கடந்து இனமாக முடிவெடுக்க வேண்டிய விடயம் இது என்பதே முக்கியம். ஆனால்,கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடுகளும் ஈகோக்களும் இந்த விடயத்தில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்துவதாகத் தெரிகிறது. பரஸ்பரம் ஒருவர் மற்றவரைக் குற்றம் சாட்டுகிறார்கள்.முன்னணி தொடர்ந்து தமிழரசுக் கட்சிக்கு எதிரான பரப்புரைகளை முன்னெடுத்து வருவதாகவும் தங்களை துரோகியாக்க முயற்சிப்பதாகவும் தமிழரசுக் கட்சி நம்புகிறது. அவர்கள் அப்படி நம்புவார்களாக இருந்தால் முன்னணி அவ்வாறான துரோகியாக்கும் பரப்புரைகளை முதலில் நிறுத்த வேண்டும்."நாங்கள் தயாராக இருக்கின்றோம் நீங்கள் இணைகிறீர்களா?" என்ற விதமான உரையாடல்களுக்குப் பதிலாக "நீங்களும் வாருங்கள் ஒன்றாகக் கூடித் தேரை இழுக்கலாம்" என்று கேட்கலாம். ஏனென்றால் இது கட்சி கடந்து இனமாகச் செயற்பட வேண்டிய இடம்.எனவே இப்பொழுது அவசரமாக முடிவெடுக்க வேண்டும்.கட்சி முரண்பாடுகளைத் தூக்கி ஒரு பக்கம் வைத்துவிட்டு இந்தக் கட்சிகள் ஒரு மேசையில் அமர்ந்திருந்து ஆறஅமரக் கதைக்க வேண்டும். மனம் திறந்து கதைக்க வேண்டும்.

யார் என்ன சொன்னாலும் தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரனின் பிடிதான் பலமாக உள்ளது.ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் ஐ.நா.வுக்கு கூட்டுக்கடிதம் அனுப்ப வேண்டும் என்ற விடயத்தில் ஆர்வமாக இருப்பதாகத் தெரிகிறது. தமிழரசுக் கட்சியின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைத்துலகப் பொறிமுறைக்கு ஆதரவான நிலைப்பாட்டோடு இருப்பதாகவே உணரமுடிகிறது.அவர்கள் தமக்கு வாக்களித்த மக்களுக்கு பொறுப்புக்கூற விரும்புவதாகவே தெரிகிறது. அண்மை வாரங்களில் சி.வி.கே. தெரிவித்து வரும் கருத்துகளைத் தொகுத்துப்பார்த்தால் அப்படித்தான் தெரிகிறது. கட்சி முரண்பாடுகளை ஒரு பக்கம் வைத்துவிட்டு இனமாகச் சிந்திக்க வேண்டிய விடயங்களில் ஒரு பொது முடிவை எடுக்கத்தக்க விதத்தில் ஒரு பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்று அண்மையில் மு.திருநாவுக்கரசு கருத்து தெரிவித்திருந்தார்.அதற்கு பொருத்தமான ஒரு கட்டமைப்பையும் உருவாக்க வேண்டும் என்று அவர் கூறியிருந்தார்.

உதாரணமாக ஐ.நா.வைக் கையாள்வது, இந்தியாவைக் கையாள்வது போன்ற விடயங்களில் ஒரு பொதுமுடிவு இருக்க வேண்டும். தமிழ் மக்களின் வெளி விவகாரத்தோடு சம்பந்தப்பட்ட, தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தில்நிர்ணயக்காரமான தாக்கத்தை செலுத்தக்கூடிய விடயங்களில் ஒரு பொது முடிவை அல்லது பெரும்பான்மை முடிவை எடுக்கத்த கடிதத்தில் ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

அந்த கட்டமைப்புக்குள் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகளும் குடிமக்கள் சமூகங்களைச் சேர்ந்தவர்களும் ஈழத் தமிழர்களின் நீதிக்கான போராட்டத்தில் விசுவாசமாக உழைக்கும் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் தமிழ்க்கட்சிகள் மீது தொடர்ந்து ஆன்மீகத் தலையீட்டைச் செய்துவரும் மதத்தலைவர்களும் இருக்கலாம். அப்படி ஒரு குழு தான் எதிர்காலத்தில் ஓர் இனமாக தமிழ்மக்கள் முடிவெடுக்கும் விடயங்களைக் கையாளுமாக இருந்தால் சிறப்பாக இருக்கும்.

அந்தக் குழுவுக்கு முடிவெடுக்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.இந்த விடயத்தில் தன்னைப் பெரிய கட்சியாகவும் முதன்மை கட்சியாகவும் கருதும் தமிழரசுக் கட்சி அப்படி ஒரு குழுவில் தனக்கு முதன்மை வேண்டும் என்று எதிர்பார்க்கும். அதைக் கவனத்தில் எடுத்து அந்தக் கட்டமைப்பை உருவாக்கலாம். அதிகம் ஜனநாயகப் பண்பு மிகுந்ததாகவும் பெரும்பான்மையினரின் பொது முடிவை ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் அந்த கட்டமைப்பை வடிவமைக்க வேண்டும். அந்தக்கட்டமைப்புக்கு துறைசார் நிபுணத்துவ ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.


அப்படி ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டால்தான் ஐ.நா. உட்பட வெளி விவகாரங்களைக் கையாள்வதில் தமிழ்மக்கள் ஒரு பொதுவான முடிவை எடுக்கலாம். அப்படி ஒரு கட்டமைப்பு இல்லாத வெற்றிடத்தில்தான் ஐ.நா. கூட்டத் தொடர் வரும் பொழுது அதற்கு சில மாதங்களுக்கு முன்பு கூடி, அவசர அவசரமாக கடிதம் எழுதுவதும் அனுப்புவதுமாக தமிழ் அரசியல் நகர்கிறது. அப்படி ஒரு கட்டமைப்பு இருந்தால் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உட்பட உலகப் பொது நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் நாட்டுக்குள் வரும் பொழுதும் வெளிநாட்டுத் தூதரகங்களின் முக்கியஸ்தர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளைச் சந்திக்கும் பொழுதும் ஒரு பொதுமுடிவை முன்வைத்துக் கதைக்கக் கூடியதாக இருக்கும்.

கடந்த 16 ஆண்டுகளுக்கு மேலான ஐக்கிய முயற்சிகளில் இருந்து கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையிலும், தமிழ் மக்கள் பேரவை,தமிழ்ப் பொது வேட்பாளர்,இப்பொழுது உருவாக்கப்பட்டிருக்கும் தமிழ்த் தேசியப் பேரவை என்பவற்றுக்கூடாகக் கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையிலும், கடந்த 16 ஆண்டு கால நீதிக்கான போராட்டத்தில் இருந்து கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையிலும், குறிப்பாக ஐ.நா.வானது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு நோகாத முடிவுகளை எடுத்துவரும் ஒரு பின்னணியிலும், அதிலும் குறிப்பாக கடந்த 16 ஆண்டுகளில் முதல் தடவையாக 2021இல்,தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட எல்லாக் கட்சிகளும் இணைந்து ஐ.நா.வுக்கு அனுப்பிய ஒரு கடிதத்துக்குப் பின்னரான கடந்த நான்கு ஆண்டு கால தொகுக்கப்பட்ட அனுபவங்களின் அடிப்படையிலும், அப்படி ஒரு கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.அப்படி ஒரு கட்டமைப்பை அவசரமாக உருவாக்க முடியாது.இப்போதைக்கு உடனடியாகச் செய்ய வேண்டியது கூட்டுக்கடிதத்துக்குள் தமிழரசுக் கட்சியை எப்படி உள்வாங்குவது என்பதுதான். செம்மணி திறந்து விட்டிருக்கும் புதிய வாய்ப்புகளை எப்படிக் கெட்டித்தனமாகக் கையாள்வது என்பதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.முபாறக்

# அறிந்தும் அறியாமலும்



## ரணில்தான் அதற்கு சரி

சில நாள்களுக்கு முன் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தனர். அவர்களின் மனக்குறைகளை ரணிலிடம் கொட்டித் தீர்த்தனர். " சேர்..அரசு இப்ப கடும் வீக்கா போய்கிட்டு இருக்கு. இந்த நேரத்துல நீங்க எதிர்க்கட்சித் தலைவராக இருந்திருக்கணும் சேர். நிறையப் பிரச்சினைகள வெளிய கொண்டு வந்திருக்கலாம்.

"நீங்க மட்டும்தான் தைரியமா அரசை எதிர்த்து நிப்பீங்கள். சஜித் இதுக்கெல்லாம் சரிப்பட்டு வரமாட்டார்."

என்று சஜித்தை ரணிலிடம் போட்டுக் கொடுத்துவிட்டுச் சென்றனர். சஜித்தை எதிர்கட்சித் தலைவர் பதவியில் இருந்து தூக்குவதற்கு ஓடித்திரிகிற ஆட்கள் அவர்களாம்.

## திருட்டுக் குடும்பமா?

மொட்டுக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தலைமையிலான மொட்டுக்கட்சி முக்கியஸ்தர்கள் கடந்த வாரம் இலங்கைக்கான சீனத் தூதுவரைச் சந்தித்துப் பேசினர். பல விடயங்கள் பேசப்பட்டாலும் மொட்டு ஆட்களின் குறி எல்லாம் ஒரு விடயத்தின்மீதுதான் இருந்தது. அதுதான் ராஜபக்ச குடும்பத்தை சீனாவின் ஊடாக சுத்தப்படுத்துதல். அதாவது, அவர்கள் திருடவில்லை என்று சீனத் தூதுவர் அவரின் வாயால் இந்த நாட்டு மக்களுக்குச் சொல்லவேண்டுமாம். (நல்லகதைதான் போங்கள்)

"சீனாவின் வேலைத்திட்டங்கள் மூலம் ராஜபக்ச குடும்பம் திருடியதா?" என்று இவர்கள் சீனத் தூதுவரிடம் கேட்டனர். அவர் "ஆமாம்" என்று ஒரே வார்த்தையில் சொல்வாரா ? இல்லைத்தானே . எனவே 'அதற்கான ஆதாரம் என்னிடம் இல்லை' என்று இராஜதந்திரரீதியில் மழுப்பலாகப் பதில் வழங்கினார். 'அப்படியென்றால் அவர்கள் திருடவில்லை என்று எதிர்காலத்தில் இந்த நாட்டு மக்களுக்கு நீங்களே சொல்லுங்கள் 'என்று மொட்டுக் கட்சியினர் கெஞ்சி இருக்கிறார்கள்.

ஆனால், தூதுவரோ சிரித்து மழுப்பிவிட்டார்.



## விருப்பமானவர்கள் மட்டும்....

சில நாள்களுக்கு முன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவரது 80 ஆவது பிறந்தநாளை கேக் வெட்டிக் கொண்டாடினார். அந்த நிகழ்வில் வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து அதே நாள் இரவு வேறு ஓர் இடத்திலும் இரவு விருந்து ஒன்றை அவர் ஏற்பாடு செய்திருந்தார்.

கேக் வெட்டிய நிகழ்வில் கலந்துகொண்ட பலரை இரவு விருந்தில் காணமுடியவில்லை. அவர்களை அழைக்கவில்லையா? என்று சிலர் சந்திரிகாவிடம் கேட்டபோது, "எனக்கு மிகவும் விருப்பமான ஆட்களை மட்டும்தான் அழைத்தேன்." என்று சிம்பிளாக பதில் வழங்கினாராம் சந்திரிகா. அப்படியானால் விருப்பமில்லாதவர்களையும் பிறந்தநாள் கேக் வெட்டும் விழாவுக்கு அழைத்தது எப்படி ?

அதை ஏற்பாடு செய்தது சந்திரிகா இல்லையாம். அவரது பிள்ளைகளாம்.

## நாமலிடம் ஓடும் கட்சிகள்

இந்த அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தும் கூட்டுச்சேர்ந்து செயற்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் பல கட்சிகள் உள்ளன. ஆனால், யாரின் தலைமையின்கீழ் ஒன்றுசேருவது என்பதுதான் இங்கு பிரச்சினை.

சஜித் பிரேமதாஸவின் தலைமையின்கீழ் இந்த இணைவைச் செய்யவேண்டும் என்று அந்தக் கட்சி உறுப்பினர்கள் பலர் முயற்சிகளை மேற்கொண்டனர். இதற்காக ஏனைய கட்சிகளுடனும், பேச்சு நடத்தினர். அவர்களும் இதற்குச் சம்மதம் தெரிவித்து இருந்தனர். ஆனால், அப்படி சம்மதம் தெரிவித்த பலர் நாமல் ராஜபக்சவுக்கு பின்னால் இப்போது ஓடத் தொடங்கியுள்ளனராம்.

இதற்கு சஜித்தின் பலவீனமே காரணம் என்று கூறும் சஜித்தின் ஆள்கள் கடும் கவலையில் உள்ளனராம். இப்படியே விட்டால் எதிர்காலத்தில் நாமல் எதிர்கட்சித் தலைவராகிவிடுவாரோ என்று அவர்கள் யோசிக்கத் தொடங்கியுள்ளார்களாம் .





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மிலிந்த மொறகொடவின் இராஜதந்திரமும் அநுர அரசாங்கமும்

○ அ.நிக்ஸன்

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான நாள் முதல் இன்றுவரை ஏறத்தாழ 38 வருடங்களில் சிங்கள அரசியல் தலைவர்கள் இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பு என்பதையே நிறுவியுள்ளனர். ஆனால் ஒப்பந்தம் கைச்சாத்திட காரண - காரியமாக இருந்த ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த விடயங்களில் எந்தவித முன்னேற்றங்களும் இல்லை.

முப்பது வருட ஆயுதப் போராட்டத்தின் குழந்தைதான் ஒப்பந்தத்தின் மூலம் பெறப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம். ஆனால் அந்தச்சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதைவிடவும் அந்தச்சட்டத்தில் இருந்து 13 வகையான அதிகாரங்கள் அதாவது மாகாணசபைகளுக்கு உரிய விதிகள் மத்திய அரசால் மீளப் பெறப்பட்டுள்ளன.

கடந்த ஜூன் மாதம் மாகாணசபைகளிடம் இருந்து போக்குவரத்து அதிகாரசபையின் அதிகாரங்கள்கூட கொழும்பை மையமாகக்கொண்ட போக்குவரத்து அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு மாகாணசபைகளுக்குரிய அதிகாரங்கள் மீளப் பெறப்பட்டுக்கொண்டிருக்கும் அதேநேரம் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலத்தைப் பயன்படுத்தி, இலங்கை அரசு குறிப்பாக சிங்களத் தலைவர்கள் இந்திய - இலங்கை உறவு என்பதையும் அதன் நாகரிகத்தையும் மடைமாற்றிவருகின்றனர். ஏற்கனவே பௌத்த சமயம் இந்தியாவின் ஒரிசா மாநிலத்தின் ஊடாகவே இலங்கைக்கு வந்ததாக இந்தியத் தொல்லியல் நிபுணர் அமர்நாத் வரலாற்றைத் திரிபுபடுத்திவரும் நிலையில், வட இந்தியாவுடன் தமக்குள்ள உறவு குறிப்பாக நாகரிக உறவு என்பதை 'இரட்டையர்கள்' (twins) என்ற அடிப்படையில் முன்னாள் அமைச்சரும் இந்தியாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவருமான மிலிந்த மொறகொட வலிந்து நிறுவ முற்படுகின்றார்.

தூதுவர் பதவியில் இருந்து விலகிய பின்னரும் மிலிந்த மொறகொட புதுடில்லியில் தங்கியிருந்து இந்த இரட்டையர்கள் என்ற கருத்தியலை நிறுவுவதற்கு தொடர்ச்சியாகப் படாத பாடு படுகின்றார். மௌரியப் பண்பாட்டைக்கொண்ட ஹிந்தி மொழியை மையப்படுத்திய ஆரியர்களும் சிங்களவர்களும் இரட்டையர்கள் என்ற கருப்பொருள் உருவாக்கப்பட்டு "இரட்டை நாகரிகம்" (Civilizational twins) என்ற பொருளில் தற்போது புதுடில்லியில் ஆய்வுகள் நடைபெற்றுவருகின்றன.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஒரு நெருங்கிய மற்றும் பன்முகத்தன்மை வாய்ந்த கலாசார மற்றும் வரலாற்று உறவு உள்ளது எனவும் இது ஓர் இரட்டை நாகரிகம் என்றும் வியாக்கியானம் செய்யப்படுகின்றது. இந்தியாவின் பிரபல செய்தி இணையமான வியோன் (Wion) ஊடகத்தின் தொலைக்காட்சிக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே மிலிந்த மொறகொட இந்த வியாக்கியானத்தைக் கொடுத்துள்ளார். புத்தர்- ராமர் என்ற வரலாற்று இதிகாசங்களை மையமாகக் கொண்டு சிங்கள - ஆரிய உறவு நீடித்தது என்ற அடிப்படையில் தாங்கள் இரட்டையர்கள் என்ற தொனியில் அவர் கற்பிதம் செய்கிறார். புதுடில்லியில் சமீபத்தில் இடம்பெற்ற இரட்டையர் நாகரிகம் என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற மாநாடு ஒன்றிலும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, இந்த இரட்டை நாகரிகம் என்பதை வலியுறுத்தியிருக்கிறார். இந்தியாவின் பிரபல பொருளியல் நிபுணர் பேராசிரியர் நாகநாதன் சென்னையில் கடந்த மே மாதம் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் இந்த இரட்டையர் நாகரிகம் என்ற கருத்தியலை சிங்கள அரசியற்தலைவர்கள் இந்திய மத்திய அரசுக்கு விதைத்துள்ளனர் என்றும், அதன் அடிப்படையில் இலங்கையில் உள்ள பௌத்த பீடாதிபதிகளையும் இந்திய அரசியற்தலைவர்கள் எதிர்காலத்தில் காலில் விழுந்து வணங்கும் நிலை உருவாகும் என்றும் கூறியிருக்கிறார். இந்தியப் பிரதமர் மோடி,மே மாதம் இலங்கைக்கு வந்தபோது பௌத்த பீடாதிபதி ஒருவரின் காலில் விழுந்து முதற்தடவையாக வணக்கம் செலுத்தியமை இந்த அடிப்படையில்தான் என்ற கருத்தையும் பேராசிரியர் முன்வைத்திருந்தார்.

ஆகவே இந்தப் பின்னணியில், இந்த இரட்டை நாகரிகம் என்ற கருத்தியலை உருவாக்கியதன் மூலம் வடஇந்தியாவை மையமாகக்கொண்ட உறவும் அதன் மூலமான அரசியல் பொருளாதார நிலையும், அதன் நீட்சியும் ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்திய மத்திய அரசின் தலையீட்டில் மாற்றத்தை உருவாக்கும் என்ற அச்சம் தற்போது எழுந்துள்ளது.

ஏற்கனவே 13 ஆவது திருத்தச் சட்டம் ஒன்றைத் தவிர வேறு எந்தவோர் அரசியல் தீர்வுக்கும் இந்திய மத்திய அரசு இணங்கி வராத சூழலில், தற்போது உருவாக்கப்பட்டுள்ள 'இரட்டை நாகரிகம்'என்ற கருத்தியல் இந்திய- தமிழக மற்றும் ஈழத் தமிழர் உறவில் பெரும் விரிசலை உருவாக்கலாம் என்ற சந்தேகங்கள் இல்லாமலில்லை.

ஆனால் இந்த இந்திய - இலங்கை நாடுகளுக்கு இடையே ஒரு நீண்ட மற்றும் சிக்கலான தொடர்பு உள்ளது, இது மத, மொழி, பண்பாடு மற்றும் அரசியல் பரிமாற்றங்களால் குறிக்கப்படுகிறது. ஆனால் அவற்றை முற்றாக மாற்றியமைத்து பௌத்த - இந்து உறவு என்ற தளத்தை மையப்படுத்திய, ஆனால் சைவத் தமிழர்கள் அல்லது சைவ சமயம் என்ற கோட்பாட்டின் முதன்மையை மாற்றி இந்திய- இலங்கை உறவு என்ற அடிப்படையைத் தோற்றுவிப்பதே இதன் நோக்கமாக இருக்கலாம்.

இருந்தாலும் ஈழத்தமிழர்களும் தமிழ் நாட்டுத் தமிழர்களும் முரண்படாத வகையில் இந்த இந்த இரட்டை நாகரிகம் என்ற கருத்தியலை புதுடில்லியில் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கும் ஆய்வுக் கூட்டங்களில் சில இந்திய ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இருந்தாலும், மிலிந்த மொறகொட போன்ற சிங்கள இராஜதந்திரிகளின் நோக்கம் வேறு, குறிப்பாக ஈழத்தமிழர்களை மையப்படுத்திய இந்திய - இலங்கை உறவு என்பதைவிடவும், பௌத்த சிங்கள மக்களை மையப்படுத்திய உறவுதான் இந்த 'இரட்டை நாகரிகம்' என்பதை மிலிந்த மொறகொட போன்றோர் நிறுவ முற்படுகின்றனர். அப்படித்தான் நிறுவப்பட்டுமுள்ளது. ஆனால் இது இன்னமும் அதிகாரபூர்வமாக மேலெழவில்லை.

இந்தப் பின்னணியில்தான் சில இந்தியத் தொல்லியல் ஆய்வாளர்கள் இந்த இரட்டை நாகரிகம் என்பதற்கு பின்வருமாறு கற்பிதம் செய்கின்றனர். இந்திய - இலங்கை உறவு வரலாற்று ரீதியாக ஆழமானது. இலங்கையின் வரலாறு மற்றும் கலாசாரத்தில் இந்தியக் கலாசாரத்தின் தாக்கம் மிகவும் குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் பௌத்தம் இந்து ஆகிய இரு மதங்களும் இலங்கை மற்றும் இந்தியாவின் முக்கியமான மதங்களாகும். பௌத்தம் இலங்கையில் தோன்றியதாகக் கூறப்பட்டாலும், அதன் தோற்றம் மற்றும் பரவல் இந்தியாவில் வேரூன்றியுள்ளது. இந்து மதம் இலங்கையில் பரவலாக உள்ளது, மேலும் இந்தியாவிலிருந்து இலங்கை வந்த இந்துத் துறவிகள் மற்றும் அறிஞர்களால் இது பரப்பப்பட்டது. அதேநேரம், நூற்றாண்டுகளுக்கும் மேலான இந்திய- இலங்கைக் கலாசாரப் பரிமாற்றமும் உண்டு. இந்தப் பரிமாற்றங்கள் கலை, இலக்கியம், இசை, நடனம் மற்றும் உணவு போன்ற பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகின்றன. இதேபோன்று தமிழ் மொழி இலங்கை மற்றும் இந்தியாவின் தெற்குப் பகுதிகளில் பரவலாகப் பேசப்படுகிறது. இந்தோ ஆரிய மொழி குடும்பத்தைச் சேர்ந்த சிங்களம், இலங்கையின் முக்கியமான மொழியாகும்.

இந்திய இலங்கை நாடுகளில் அரசியல் உறவுகள் சிக்கலானவை. இரு நாடுகளும் வெவ்வேறு அரசியல் அமைப்புகளைக் கொண்டுள்ளன, ஆனால் அவை பல பொதுவான நலன்களைப் பகிர்ந்துகொள்கின்றன. ஜனநாயகத்தின் மீதான பார்வை, பொருளாதார சூழல் மற்றும் புவிசார் மூலோபாயம் போன்றவற்றிலும் இலங்கை ஒத்திசைந்து செயற்படுகின்றது. இரு தேசங்களினது மக்களின் உறவுகளும் வலுவாக உள்ளன. இந்த பொதுவான பன்முகத்தன்மைகள் இலங்கை - இந்திய உறவின் உறுதியான அடித்தளத்தை வெளிப்படுத்துவாக மிலிந்த மொறகொட விளக்குகிறார்.

மிலிந்த மொறகொடவின் விளக்கமும் இந்திய ஊடகங்கள் பலவற்றில் அவர் கூறிவருகின்ற இந்த இரட்டையர்கள் என்ற கருத்தியலும் பௌத்த சிங்கள மௌரியப் பண்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதைத் தெளிவாக உணரமுடிகிறது.

ஆனால் இது பற்றிய எந்தவொரு புரிதல்களும் தேடல்களும் அற்ற நிலையில் ஈழத்தமிழர்களும் மற்றும் ஈழத்தமிழ் தொல்லியல் ஆய்வாளர்கள், வரலாற்று ஆய்வாளர்கள் அமைதியாக இருக்கின்றனர்.

இந்தியாவுக்கும் குறிப்பாக தமிழகத்துக்கும் ஈழத்தமிழர்களுக்கும் தொப்புள் கொடி உறவு உள்ளதாகக் கூறி தமக்குள்ளேயே பெருமைப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். ஆனால் சிங்கள அரசியல் தலைவர்கள் 'இலங்கை அரசு' என்ற கட்டமைப்பின் ஊடாக இந்திய - இலங்கை உறவு என்பதை 'இரட்டையர்கள்' என்று வரையறை செய்து ஆரியர்களை மையப்படுத்திய இந்திய மொழியையும் வட இந்திய பண்பாடுகளையும் பௌத்த சிங்களப் பண்பாட்டையும் சம நிலையில் மாற்றியமைத்துவருகின்றனர்.

ஆனால் ஈழத்தமிழர்கள் கூறுகின்ற தொப்புள் கொடி உறவு என்பது இரண்டாம் தரமானது. ஆனால் சிங்கள மக்கள் தங்களை இந்திய மௌரியப் பண்பாட்டுடன் ஒப்பிட்டு வட இந்தியாவுடன் தங்களைச் சமநிலைப்படுத்தி வருகின்றனர். இத்தனைக்கும் இலங்கை ஒரு சிறிய நாடு, பொருளாதார நெருக்கடியுள்ள ஒரு நாடு. ஆனால் துணிவோடு தங்கள் நாட்டையும் தங்கள் மொழி ,பண்பாட்டையும் வட இந்தியாவுடன் ஒப்பிட்டு 'இரட்டையர்கள்' அதாவது 'இரட்டை நாகரிகம்'என்று வரலாற்றில் பதிவுசெய்கின்றனர்.

13 ஆவது திருத்தச்சட்டத்தை நீக்கம் செய்ய வேண்டும் என்று மிலிந்த மொறகொட போன்ற இராஜதந்திரிகளும் பேராசிரியர் ரொஹான் குணவர்த்தன போன்ற இலங்கை இராணுவ தேசிய பாதுகாப்பு விவகார ஆலோசகர்களும் தொடர்ந்து வலியுறுத்திவருகின்றனர்.

ஜே.வி.பி. யினால் உருவாக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தி அல்லது அநுர அரசாங்கம், கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால்' இலங்கை ஒற்றை ஆட்சி அரசு' என்ற கட்டமைப்பை வலியுறுத்தி இந்திய சீன அரசுகளுடன் உறவை பேணக்கூடிய அணுகுமுறைகளை வகுத்துக்கொண்டிருக்கும் மிலிந்த போன்ற இராஜதந்திரிகளை நன்கு பயன்படுத்தி வருகின்றது.

ஆனால் ஈழத்தமிழ் தரப்பு வல்லரசுகளைஅணுகுவதற்கான ஏற்பாடுகள் எதுவும் இன்றி தமக்குள் முரண்பட்டுக்கொண்டிருப்பது ஆரோக்கியமானது அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ ஆதிரன்





# மாலினி பொன்சேகா

## இலங்கை சினிமாவின் ராணி (1947 - 2025)

2

சிங்களத் திரையுலகிற்கு மாலினி பொன்சேகா நான்கு தசாப்தங்களாக ஆற்றிய பங்களிப்பினைக் கௌரவிக்கும்முகமாக அவரது ஐம்பத்தாறாவது பிறந்த தினமான 2003 ஏப்ரல் 30 அன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் "மாலினியே" என்ற மகுடத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், "சிங்களத் திரையுலகின் ராணி என மக்களால் நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள். அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். என் கையில் ஒரு கிரீடம் இருந்திருந்தால் அதை உங்களுக்கு இங்கு நிச்சயமாகச் சூட்டியிருப்பேன்." என மாலினியைப் பார்த்துக் கூறியிருந்தார். லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் போன்ற முதன்மை வாய்ந்த இயக்குநர் ஒருவரிடமிருந்து இத்தகைய புகழாரம் கிடைப்பதென்பது உண்மையில் தலைசிறந்ததொன்றாகும்.

மாலினி பொன்சேகாவுக்கும் லெஸ்டருக்கும் இடையில் ஓர் ஆழமான கலைத்திறனான நீண்டகால உறவு இருந்தது. லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் இயக்கத்தில் 1972 காலப்பகுதியில் வெளிவந்த "நிதானய" (புதையல் அல்லது பொக்கிஷம்) இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த சிங்களத் திரைப்படமாக அமைந்ததோடு லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், சிங்கள சினிமாவின் சூப்பர் ஸ்டார் என்றழைக்கப்படும் காமினி பொன்சேகா, மாலினி பொன்சேகா எனும் மூவரினதும் திரையுலக வாழ்வில் ஒரு திருப்புமுனையாகவும் மைல்கல்லாகவும் விளங்கியிருந்தது. நிதானய 1972 காலப்பகுதியில் வெனிஸ் சர்வதேச திரைப்பட விழாவில் சென்.மார்க் சில்வர்லயன் விருது வென்றது. அதே ஆண்டில் லண்டன் திரைப்பட விழாவில் அவ்வாண்டில் மிகச்சிறந்த திரைப்படங்களில் ஒன்று எனும் சான்றிதழையும் பெற்றிருந்தது. உலகத் திரைப்பட நூற்றாண்டை முன்னிட்டு பிரான்ஸ் சினிமா நிறுவனத்தால் (Cinemathicque Institute of France) தொகுக்கப்பட்ட உலகின் தலைசிறந்த 100 திரைப்படங்களின் பட்டியலில் "நிதானய"வும் இடம்பெற்றிருந்தது தவிரவும் சிறந்த பத்து ஆசியத் திரைப்படங்களில் இதுவுமொன்று எனத் தகுதி பெற்றது. 1998 காலப்பகுதியில் இலங்கையின் சுதந்திரதினப் பொன் விழாவில் கடந்த ஐம்பது வருடங்களில் வெளியான சிங்களத் திரைப்படங்களில் மிகவும் சிறந்த திரைப்படத்துக்கான விருதும் "நிதானய"வுக்கு வழங்கப்பட்டது.

ஜி.பி. சேனாநாயக்க எழுதிய சிறுகதையொன்றை அடிப்படையாகக் கொண்டுதான் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் "நிதானய"வை உருவாக்கினார். ஜி.பி. சேனாநாயக்கவின் சிறுகதையில் புதையல் எடுப்பதற்கு ஒரு கன்னிப்பெண்ணைப் பலி கொடுக்க வேண்டியிருந்தது. அந்தக் கன்னிப்பெண்ணுக்கு நான்கு பிறவிக்குறிகள் (Birthmarks) இருக்கும். நிதானயவில் காமினி பொன்சேகா வில்லீ அபேநாயக்க என்ற பாத்திரத்திலும் மாலினி பொன்சேகா வில்லீ அபேநாயக்கவின் "கன்னி" மனைவியான ஐரின் என்ற பாத்திரத்திலும் நடித்திருந்தனர். இதில் நம்பமுடியாதவொரு தற்செயல் அதிசயமாக ஐரினாக நடித்த மாலினி பொன்சேகாவுக்கும் கதையில் குறிப்பிட்டிருந்தவாறே பொருத்தமான இடங்களில் ஒரேமாதிரியான பிறவிக்குறிகள் (Birthmarks) இருந்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். "நிதானய"வில் மாலினி பொன்சேகா நடிக்கத் தொடங்கிய காலப்பகுதியில் கதையை எழுதிய ஜி.பி.சேனாநாயக்க கண்பார்வையை இழந்திருந்தார். மாலினி பொன்சேகாவுக்கு இவ்வாறான பிறவிக்குறிகள் இருப்பது பற்றி சேனாநாயக்கவிற்குத் தெரியவந்ததும் அவரதை நம்ப மறுத்தாராம். பின்னர் அவர் மாலினி பொன்சேகாவுக்கிருந்த நான்கு பிறவிக்குறிகளையும் தனது விரல்களால் தடவித் தொட்டுணர்ந்து அதிசயித்திருக்கிறார். நிதானய காட்சி ஒளிப்பதிவில் ஆறுதலான அசைவை (Slow motion) எடுப்பதற்கு தொழினுட்ப வசதியில்லையென்பதால் காமினி பொன்சேகா, மாலினி பொன்சேகா இருவரும் சுழல் நடன அசைவு ஒழுங்கில் இயல்பாகவே ஆறுதலாக அடியெடுத்து வைத்தே நடித்திருந்தனர். இது கச்சிதமான ஒழுங்கசைவைக் கொண்டிருக்கும் சாதனையாகும். திரைப்படத்தில் மாலினி பொன்சேகா நிலைமைக்கேற்றவாறே காமினி பொன்சேகாவுடன் இணைந்து தனது முழுத்திறமையையும் வெளிக்காட்டி நடித்திருந்தார். எடுத்துக்காட்டாக இத்திரைப்படத்தில் காமினி பொன்சேகா திடீரென மாலினியின் கன்னத்தில் அறைந்து அவரைத் தரக்குறைவாகத் திட்டுவதாக வரும் காட்சி அவரது நடிப்புத்திறனின் உச்சத்தை வெளிப்படுத்தியது. அந்தக் காட்சியைப் படமாக்கும் முறையை லெஸ்டரும் காமினியும் முன்கூட்டியே மாலினிக்குக் கூறியிருக்கவில்லை. அதனால் காமினி தனது கன்னத்தில் அறைந்து தன்னை ஆவேசமாகத் திட்டப்போகிறார் என்பது மாலினி பொன்சேகாவுக்குத் தெரிந்திருக்கவில்லை. அந்தக் காட்சி படமாக்கப்பட்டபோது காமினி பொன்சேகா தனது கன்னத்தில் அறைந்து ஆவேசமாகத் திட்டியதும் மாலினி இயல்பாகவே திகைப்படைந்து நின்றார். அதன் விளைவாக வெகு இயல்பான இயற்கையான உணர்ச்சி வெளிப்படும் உன்னதமான ஒரு காட்சியாக அது சிங்களத் திரைப்பட வரலாற்றில் நிலைத்துவிட்டது. நிதானய என்ற திரைப்படம் உண்மையில் மாலினி பொன்சேகா என்ற சிங்களத் திரையுலகின் ராணியின் கிரீடத்தில் ஓர் அணிகலன் என்றே கூறலாம்.

"நிதானய" என்ற சிறந்த கலைப்படைப்பையும் கடந்து மாலினி பொன்சேகா 1970களில் வியாபார ரீதியாக பெரும் வெற்றிபெற்றிருந்த "சூறயா சூறயமாய்" "ஆவா சோயா ஆதரே" "சனாகெலியா" "கஸ்தூரி சுவந்த" "ஹொறந்தட்ட ஹொறந்தாய்" "ஹொறந்தாய் நறக்காய்" "ஹெறந்தமவெலாவ" "சதஹட்டம ஒப மஹே" "சஹாயை" "எதத்சூறயா அதத்சூறயா" "ஆதரே ஹிதெனவா தெக்கம்" போன்ற திரைப்படங்களில் காமினி பொன்சேகாவுடன் இணைசேர்ந்து நடித்திருந்தார். அக்கால கட்டத்தில் தென்னிந்தியத் திரையுலகின் கமல்ஹாசன் ஸ்ரீதேவி போன்று காமினி பொன்சேகா மாலினி பொன்சேகா வெற்றிகரமான இணையாக சிங்களத் திரையுலகில் விளங்கினர். இருவரையும் கணவன் மனைவியெனத் தவறாகப் பலரும் கருதுமளவுக்கு அந்த இணை பிரபலமாகவிருந்தது. 1977 காலப்பகுதியில் வெளிவந்த, "தெவியனே ஒப் கோஹெத்" என்ற திரைப்படத்தில் மாலினி பொன்சேகா காமினியுடன் இணைந்து நடித்த பின்னர் 21 வருடங்களாக எந்தவொரு படத்திலும் இணைசேரவில்லை. இயல்பிலேயே தன்னகம்பாவமும் எப்போதும் மற்றவர்கள் தன்மீதே கவனம் செலுத்தவேண்டும் என எதிர்பார்க்கும் சுபாவமும் கொண்டவரான காமினி பொன்சேகா தன்னைத் தவிர்த்து விஜேகுமாரதுங்க, ரவீந்திர ரன்தெனிய, திஸ்ஸ விஜேசுந்தர முதலான அன்றைய இளங்கதாநாயகர்களுடன் மாலினி பொன்சேகா இணைசேர்ந்து நடிக்க ஆரம்பித்தமையே இவ்விரிசலுக்குக் காரணமென அப்போது பரவலாகப் பேசப்பட்டது. எனினும் 1998 காலப்பகுதியில் காமினி பொன்சேகா இயக்கி நடித்திருந்த "அந்திமறேயா" எனும் திரைப்டத்தில் 21 வருடங்களுக்குப் பின்னர் மாலினி பொன்சேகா இணைசேர்ந்து நடித்திருந்தார். காமினி பொன்சேகா இறப்பதற்குச் சில வாரங்களுக்கு முன்னதாக வழங்கியிருந்த நேர்காணல் ஒன்றில் சந்தியாகுமாரியை மிகவும் அழகான நடிகை என்றும் மாலினி பொன்சேகாவே மிகவும் சிறந்த நடிகை என்றும் றொனி ரணசிங்க சிறந்த குணசித்திர நடிகர் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

மாலினி பொன்சேகா, காமினி பொன்சேகாவையடுத்து விஜேகுமாரதுங்கவுடன் அநேகமான திரைப்படங்களில் இணைசேர்ந்து நடித்திருந்தார். தென்னிந்திய தமிழ் சினிமா[illegible] போலவே விஜேகுமாரதுங்க மாலினி பொன்சேகா [illegible] அமைந்தது. லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸைப்போன்று சிங்களத் திரையுலகின் முக்கியமான இயக்குநர்களிலொருவராகக் குறிப்பிடப்படும் தர்மசேன பத்திராஜாவின் இயக்கத்தில் வெளிவந்த, "எயடான் லொக்கு லமயாக் (How to be an adult)", "பம்பரு அவித்" (1978) ஆகிய திரைப்படங்களிலும் யசபாலித நாணயக்கார இயக்கிய துஷாரா (1973), லெனின் மொரேஸ் இயக்கிய "உன்னத்த ஹாஸ் மலத் தஹாய்" (1976), தயா விமலவீர இயக்கிய மிஹிண்டும் சிகின்ன (1982) ஆகிய திரைப்படங்களிலும் விஜேகுமாரதுங்கவுடன் மாலினி பொன்சேகா இணைந்து நடித்திருந்தார். இன்றைய சிங்களத் திரையுலகின் முக்கியமான இயக்குநர்களிலொருவரான பிரசன்ன விதானகே இயக்கத்தில் 2009 காலப்பகுதியில் வெளிவந்த ஆகாசகுசும் (ஆகாயத்தாமரை) என்ற திரைப்படத்தில் மாலினி பொன்சேகா "சந்தியராணி" என்ற பிரதான கதாபாத்திரமேற்று நடித்திருந்தார். பிரசன்ன விதானகே இயக்கத்தில் அவர் நடித்திருந்த ஒரேயொரு திரைப்படம் இதுவாகும். நான் லீனியர் முறையில் எடுக்கப்பட்ட இத்திரைப்படமானது ஒரு காலகட்டத்தில் பிரபலமான முன்னணி நடிகையாகவிருந்து தற்போது வாய்ப்பிழந்து ஒதுங்கியிருக்கும் சந்தியராணி என்ற நடிகையின் வாழ்க்கை பற்றியதாகும். ஒருவகையில் இது மாலினி பொன்சேகாவின் திரையுலக வாழ்க்கையைப் பதிவுசெய்வதைப் போன்றமைந்தது. இதைச்சுற்றி சட்டவிரோதமான கருக்கலைப்புச் செயற்பாடுகள், தகாத உறவில் ஈடுபடுவோருக்குச் சந்தியராணி தனது வீட்டில் புகலிடமளிப்பது அதன் விளைவாக அவர் எதிர்கொள்ளும் அவமானம் நெருக்கடியெனக் கதை நகரும். இத்திரைப்படத்தில் சந்தியராணிக்குக் கதை வசனமென்பது பெரிதாக இல்லை. மிகப் பெரும்பாலான காட்சிகளில் பேசா மடந்தையாகவே அற்புதமான முக பாவங்களால் தன்னையொரு தேர்ந்த நடிகையாக நிரூபித்துக் காட்டியிருந்தார்.

மாலினி பொன்சேகா, "யார் இவள் (1976)" "பைலட் பிரேம்நாத் (1978)" "மல்லிகை மோகினி (1979)" "பனிமலர்கள் (1981)" எனும் நான்கு தமிழ்த் திரைப்படங்களிலும் நடித்திருக்கிறார். இவற்றில் இலங்கை இந்தியக் கூட்டுத்தயாரிப்பாக ஏ.சி.திருலோக சந்தர் இயக்கத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன் இணைந்து மாலினி பொன்சேகா நடித்திருந்த "பைலட் பிரேம்நாத்" ஒரு திருப்புமுனைப் படமாக அவருக்கு அமைந்தது. தமிழ்த் திரைப்பட ரசிகர்கள் மத்தியிலும் பிரபலமான நடிகையாக மாறினார். இலங்கையின் இயற்கை எழில் மிகுந்த பல இடங்களில் "பைலட் பிரேம்நாத்" திரைப்படமாக்கப்பட்டது. மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் இசையில் ரி.எம்.சௌந்தரராஜன் மாலினி பொன்சேகா இணைந்து நடித்திருந்த "இலங்கையின் இளங்குயில் என்னோடு இசை பாடுதோ?...." என்ற பாடல் பட்டிதொட்டியெங்கும் ஒலித்தது. இத்திரைப்படம் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் 100 நாள்களுக்கு மேல் ஓடிச் சாதனைபடைத்தது. "பைலட் பிரேம்நாத்" திரைப்படத்தில் இணைசேர்ந்து நடித்திருந்ததின் விளைவாக மாலினி பொன்சேகாவுக்கும் சிவாஜி கணேசன் குடும்பத்துக்குமிடையில் ஓர் உறவுப்பிணைப்பு ஏற்பட்டது.

*(அடுத்தவாரம் வரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்ந்தினம்

பாகம் 3

இராகவன்

**2011** தைப்பொங்கலன்று எனது சிறு கதைத்தொகுப்பின் வெளி யீட்டு விழாவை நடத்தப்போவ தாக மனோன்மணி சொன்னதில் ஒரு பக்கம் பெரிய சந்தோசமாயிருந்தாலும் மறுபக்கம் அதில் கலந்து கொள்ளமுடியவில்லையே எனக் கவலையாகவுமிருந்தது. 'உண்மையில் புத்தகமாக வந்துவிட்டதா?' என்ற சந்தேகம் வேறு இடைக்கிடையே எழுந்தது. இந்த மூட்டந்தான் மணிக் குமார் என்னிட்ட வந்து தமிழகம் செல்லவிருக்கும் தகவலை நைஸாகச் சொன்னான். அவனிடம் விசயத்தைச் சொல்லி மனோன்மணியுடன் தொடர்புகொண்டு 'எனது சிறுகதைத் தொகுப்பு ஒன்றையாவது வாங்கிவரமுடியுமா?' எனக்கேட் டேன். அவன் மறுப்பேதும் சொல்லாமல் சம்மதித்தான். அவனிடம் மனோன்மணியின் தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்தேன்.

அப்போது தமிழகத்திலிருந்து "உயிர் எழுத்து" என்ற சிற்றிதழ் வந்துகொண்டிருந்தது. அந்தச்சிற்றிதழுக்கு நான் கதை அனுப்பிப் பிரசுரமாகியிருந்த நிலையில் "உயிர் எழுத்து"சிற் றிதழ் அதுவரை தனது இதழில் வெளியான சிறுகதைகளைத் தொகுத்து "உயிர் எழுத்துச் சிறுகதைகள்" எனும் தலைப்பில் ஒரு நூலாகவும் வெளியிட்டிருந்த தகவல் கிடைத்தது. இது தொடர்பாகவும் மணிக்குமாருக்குச் சொல்லி "உயிர் எழுத்து" சிற்றிதழின் பொறுப்பாசிரியர் சுதீர் செந்திலின் தொலைபேசி இலக்கத்தையும் அவனிடம் கொடுத்தனுப்பியிருந்தேன். "புது எழுத்து" இதழாசிரியர் மனோன்மணியுடன் மீளவும் தொடர்பு கொண்டபோது மணிக்குமாரைப் பற்றிச் சொல்லி அவன் நேரில் வந்து சந்திப்பான் என்றும் அப் போது எனது சிறுகதைத்தொகுப்பை அவனிடம் கொடுத்தனுப்புமாறும் கோரியிருந்தேன். அவரும் அதை முழுமனதோடு ஏற்றுக்கொண்டு சம்மதந் தெரிவித்திருந்தார். என்றாலும் எல்லாம் திட்ட மிட்டபடி நடந்துமுடியுமா? என்றொரு சந்தேகம் என் அடிமனதில் அவ்வப்போது தோன்றத்தான் செய்தது. ஆனால் மணிக்குமார் நான் சொன்னதையெல்லாம் சிறப் பாக நிறைவேற்றித்திரும்பினார்.

39

எனது முதலாவது சிறுகதைத்தொகுப்பை எடுத்துவந்து என் கைகளில் சேர்த்திருந்தார். இதற்காக நான் என்றென்றும் அவனுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். அதோடு "உயிர் எழுத்துச் சிறுகதைகள்'' என்ற பெரிய தொகுப்பையும் கொண்டு வந்து தந்திருந்தான். இதைவிட நான் எதிர்பார்த் தேயிராத இன்னுமொரு சிறுகதைத்தொகுப்பையும் கொண் டுவந்து தந்தான். அதன் பெயர் "ஸ்ராவ்பெரி" என்பதாகும். உயிர் எழுத்துச் சிற்றிதழில் அதுவரை வெளிவந்திருந்த பாலியல் ரீதியான கதைகளை ஒரு தொகுப்பாக வெளியிட்டி ருந்தார்கள். அதிலும் எனது சிறுகதை இடம்பெற்றிருந்தது. இது எனக்கு அந்தத் தொகுப்பைப் பார்த்த பின்புதான் தெரிய வந்தது. உண்மையில் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. இருந்தும் எனது புது எழுத்து வெளியீடாக வந்திருந்த சிறுகதைத் தொகுப்பைப் பார்த்ததும் அந்த இரட்டிப்பு மகிழ்ச்சி வடிந்து வேதனைதான் மிகுந்தது. அந்தத் தொகுப்புக்கு நான் "வண் ணத்துப்பூச்சிகள் கொண்டுசெல்லும் இதிகாச நகரம்" எனப் பெயரிட்டிருந்தேன். மனோன்மணியும் அதே தலைப்பில் ஓர் அட்டையைத் தயாரித்திருந்தார்.

கறுப்பு வெள்ளை நிறச் சேர்க்கையில் சிறப்பாகத் தயாரிக்கப் பட்டிருந்த அவ்வட்டைப் படத்தையும் அவர் மணிக்குமாரிடம் கொடுத்தனுப்பியிருந்தார். ஆனால் அந்தத் தொகுப்புக்கு அவர் "கலாவல்லி முதலான கதைகள்" எனத் தலைப்பிட்டு நான்கு நிறச்சேர்க்கையுடன் கூடிய ஓர் அட்டைப் படத்துடன் கொண்டுவந்திருந்தார்.

(தொடரும்)

16




# கற்கண்டு ஓடை

## (Cat Gun - Do or Die)

திருப்பங்கள் நிறைந்த சித்திரத் தொடர்கதை

கதை: இ.சு.முரளிதரன்


வரைகலை - மகேந்திரன் வினித்





(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ச.விஷ்னு விசாகன்
தரம் - 6
யா/ மத்திய
கல்லூரி.



றொ.தக்சானி
தரம் 8
சுண்டிக்குளி
மகளிர் கல்லூரி.



அனகா
தரம் - 2
ஏஞ்சல் இன்டர்நஷல்
பாடசாலை



அ. ஜடோன்,
தரம் - 2A
யா/ புனித பத்திரிசியார்
கல்லூரி



பி.ஷமிதா,
தரம் - 4A
யா/ இந்து ஆரம்பப்
பாடசாலை

# பொது அறிவு

தலையைப் பின்புறமாக திருப்பக்கூடியது எது?
**ஆமை**

இறகு இல்லாத பறவை எது?
**கிவி**

வேகமாக ஓடும் விலங்கு எது?
**சிறுத்தை**

மனிதர்கள் வாழாத கண்டம் எது?
**அந்தாட்டிக்கா**

கறுப்புத் தங்கம் எனப்படுவது எது?
**நிலக்கரி**

வெள்ளைத் தங்கம் எனப்படுவது எது?
**பருத்தி**

மிகப்பெரிய தீபகற்பம் எது?
**இந்தியா**

உலகின் மிகப் பெரிய ஆறு எது?
**அமேசன் ஆறு**

வேகமாக ஓடக்கூடிய பறவை எது?
**ஈமு**

சிறுநீரில் உள்ள உப்பு எது?
**யூரியா**

விற்றமின்கள் மொத்தம் எத்தனை?
**எட்டு**

இரத்தத்தில் மொத்தம் எத்தனை பிரிவுகள் உள்ளன?
**நான்கு**




# செல்லப்பிராணி

நான் அன்புடன் வளர்க்கும்
செல்லப்பிராணி நாயாகும்.
ஜிம்மி என்று அழைத்ததும்
என் காலடியில் வந்து நிற்கும்.
ஜிம்மி என் விளையாட்டுத் தோழன்

**ஜெ.பிரசாத்**
*தரம் - 3*
யாழ். முத்துத்தம்பி
மகாவித்தியாலயம்



**மாணவர்களே!**

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



# முதலை

- முதலைகளின் உடல் நீளமாகவும், தடித்த தோலுடனும் இருக்கும். அவற்றின் வலுவான தாடைகள், கூர்மையான பற்கள் அவை இரையைப் பிடிக்கவும், கிழிக்கவும் உதவுகின்றன.
- அவற்றின் கண்கள் மற்றும் நாசித் துவாரங்கள் தலையின் மேல் அமைந்திருப்பதால், நீருக்கு அடியில் மூழ்கியிருக்கும்போது சுவாசிக்கவும் பார்க்கவும் முடியும்.
- முதலைகள் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்கின்றன. பெண் முதலை மணலில் கூட்டை உருவாக்கி, அதில் முட்டையிடும். முட்டைகள் மணலில் புதைக்கப்பட்டு, சூரிய வெப்பத்தால் அடைகாக்கப்படுகின்றன. குஞ்சுகள் பொரித்த பிறகு, தாய் முதலை அவற்றைத் தண்ணீருக்கு எடுத்துச் செல்கிறது மற்றும் சில காலம் வரை அவற்றைப் பாதுகாக்கிறது.
- முதலைகள் பூமியின் மிகவும் பழமையான விலங்குகளில் ஒன்றாகும்.
- முதலைகள் பொதுவாக ஆறுகள், ஏரிகள், சதுப்பு நிலங்கள், கழிமுகங்கள் போன்ற நீர்நிலைகளில் வாழ்கின்றன.
- மாமிச உண்ணிகளான அவை மீன், பறவைகள், பாலூட்டிகள் மற்றும் பிற ஊர்வனவற்றை உண்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org